காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆடி 12 | வெள்ளிக்கிழமை 28.07.2023 | கதிர் 259

### கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழிக்கு நீதி கோரி

# வட-கிழக்கு பகுதிகளில் இன்று முழு முடக்கம்

### முல்லைத்தீவில் கவனவீர்ப்புப் பேரணியும்

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விவகாரத்துக்கு நீதி கோரியும் சர்வதேச கண்காணிப்பை வலியுறுத்தியும் இன்று வடக்குகிழக்கில்முழுஅடைப்புப்போராட்டம் மேற்கொள்ளப்படுகின்றது. வலிந்துகாணா மலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கங்கள் விடுத்த அழைப்புக்கு வடக்கு கிழக்கு பொது அமைப்புக்கள் தமது முழு ஆதரவைத் தெரிவித்திருக்கும் நிலையில் இன்று வடக்கு கிழக்கு முழுமையாக முடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களின், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கங்களின் சார்பில் இந்தப் போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. முல்லைத்தீவு மாவட்ட தலைவி மரியசுரேஷ் ஈஸ்வரி, செயலாளர் பிரபாகரன் றஞ்சனா, வவுனியா மாவட்ட தலைவி சிவானந்தன் ஜெனிதா ☞ 2



## இனி இது ரகசியம் அல்ல!

நீண்ட நாட்களுக்குப் பின்னர் கொழும்பில்இருந்து பத்திரிகையாள நண்பர்அழைப்புஎடுத்திருந்தார். விவகாரம் இல்லாமல் அவர் அழைப்பெடுக்க மாட்டாரே என்ற யோசனையுடன் பேசத் தொடங்கினேன்.

ரணிலின் அனைத்துக் கட்சிக் கூட்டம் எதிர்பார்த்தபடி நடக்கவில்லை போலுள்ளது என்றார். ஏன் என்ன விடயம் என்றேன். கூட்டத்தைக் குழப்பியடித்த பழி பாவம் எல்லாம் தமிழர்கள் தலைமீதுதானே வீழும் என்று கேட்டேன்.

இல்லை நான் சொல்ல வந்தது அதல்ல என்றபடி தொடர்ந்தார். ரணில் தனது நலனுக்காகக் கூட்டிய சர்வகட்சிக் கூ-ட்டம் இப்போது பூமராங் மாதிரி அவருக்கு எதிராகவே திரும்பி வந்து நிற்கின்றது என்றார் நண்பர்.

கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் அனைவரும் இந்தத் தடவை தமிழ்க் கட்சிகளைக் குறை சொல்வதற்குப் பதில், ரணில் விக்கிரமசிங்கவையே குறை சொல்கின்றன. ரணில் ஏமாற்றுகின்றார் என்றே அனைவரும் ஒரே குரலில் கூவுகின்றனர்.

சுதந்திரக் கட்சியின் பொதுச் ☞ 2

## தடை நீக்கம்

உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தொடர்ந்து 5 முஸ்லிம் அமைப்புக்கள் மீது விதிக்கப்பட்ட தடை உத்தரவு ஜனாதிபதியால் நேற்று வர்த்தமானி அறிவித்தல் மூலம் நீக்கப்பட்டுள்ளது.

பங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இந்த 5 அமைப்புக்களுக்கும் 2021 தடை விதிக்கப்பட்டது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலை அடுத்து இந்த அமைப்புக்கள் உட்பட 11 அமைப்புக்கள் மீது தடை விதிக்கப்பட்டது.

ஐக்கியதவ்கீத், சிலோன்தவ்கீத், சிறிலங்கா தவ்கீத், ஓல் சிலோன் தவ்கீத், ஜமயத்துல் அன்சாரி சுன்னத்துல் முகமதியா ஆகிய 5 அமைப்புக்கள் மீதான தடை நீக்கப்படுகின்றது என்று ஜனாதிபதியின் வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புத்தளத்தில் ஆர்ப்பாட்டம்



புத்தளத்தில் சோசலிச இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

சகோதரத்துவ நடைபயணத்தின் மீதான கொடூர தாக்குதலுக்கு எதிர்ப்பு என்ற தொனிப்பொருளில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

புத்தளம்பேருந்து நிலையம் முன்பாக இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் ''ரணில் ராஜபக்ஷ தேசிய ஒற்றுமைக்குப்பயமா?'' சகோதரத்துவ நடைபயணத்தைத் தாக்கியதைக் கண்டிக்கிறோம் ☞ 2

## சீன அட்டைப் பண்ணைகளுக்காகவா சிறகுவலை தொழில் மீது கைவைப்பு

### கடற்றொழிலாளர்கள் சீற்றம்

வடக்கு கடல் முழுவதும் சீனக்கடல்அட்டைப்பண்ணைகளை நிறுவுவதற்காகவா மண்ணித்தலைப் பகுதியில் 150 வருடபாரம்பரியம் மிக்க சிறகுவலைத் தொழிலைக் கட்டுப்படுத்த நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள் முயற்சிக்கிறார்கள்?

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவு சமாசங்களின் முன்னாள் தலைவர் அன்னலிங்கம் அன்னராசா கேள்வி எழுப்பினார்.

பாசையூர் கடற் தொழிலாளர் கூட்டுறவு சங்கத்தில் புதன்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மண்ணித்தலை கடற்பகுதியில்சிறகுவேலைத் தொழிலில் ஈடுபட்ட பாசையூர் மற்றும் குருநகர் சிறகுவலை தொழிலாளர்களின் வலைகளை கிளிநொச்சி நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் எவ்வித முன் அறிவித்தலும் இன்றி பிடுங்கியுள்ளனர்.

150 வருட காலமாக பரம்பரை பரம்பரையாக சிறகுவலைத் தொழிலில் ஈடுபடும் மக்களின் வாழ்வாதாரத்தை கேள்விக்குஉள்ளாக்கும் வகையில் குறித்த அதிகாரிகள் செய்யப்பட்டமையை வன்மையாக கண்டிக்கிறோம்.

எமது பாரம் ☞ 2

## யாழ். பல்கலைக்கழகத்தில் கறுப்பு ஜூலை தின அஞ்சலி



தமிழர்களுக்கு எதிராகக் அரச ஆதரவுடன் கட்டவிழ்த்து விடப்பட்ட 1983 ஜூலை இனக் கலவரத்தின் நினைவேந்தல்யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிக் கப்பட்டது.

பல்கலைக் கழக பிரதான வளாகத்தில் கறுப்பு ஜூலை நினைவுருவ படத்திற்கு மாணவர்களால் ஈகச் சுடரேற்றப்பட்டதோடு மலரஞ்சலி செலுத்தி அஞ்சலிக்கப்பட்டது. ☞ 2

## ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம் இரண்டு மாணவர்கள் கைது

### அட்டாளைச்சேனையில் சம்பவம்

அட்டாளைச்சேனை மத்தியகல்லூரிதேசியபாடசாலையின் ஆசிரியர் ஒருவரைப் பெற்றோர் சிலரும் மாணவர்களும் இணைந்து தாக்கியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அட்டாளைச்சேனை மத்திய கல்லூரி தேசிய பாடசாலை ஆசிரியர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

புதன்கிழமை பாடசாலை நிறைவடைந்து வெளியேறியபோது, சில மாணவர்களும் பெற்றோரும் இணைந்து ஆசிரியர் ஒருவரைத் தாக்கினர் என்று குற்றஞ் சாட்டப்படுகின்றது.

தாக்குதலுக்குள்ளான ஆசிரியர் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பாடசாலையின்ஒழுக்கக் கோவையைச் செயற்படுத்துவதில் ஏற்பட்ட முரண்பாடே இந்தத் தாக்குதலுக்குக் காரணம் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் குறிப்பிட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில்இரண்டுமாணவர்களைக் கைதுசெய்துள்ளபொலிஸார், ஏனையோரைத்தேடிவருகின்றனர்.. (02)

## தொடருந்து சேவைகளை அதிகரிப்பதற்கு கோரிக்கை




யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசுவாமிஆலயவருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லூர் பெருந்திருவிழாவைமுன்னிட்டுதொடருந்துப்பயணசேவையைஅதிரிக்கும்படி நல்லை ஆதீன குருமுதல்வர் ஷ்ரீலஷ்ரீசோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியசுவாமிவேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் தொடருந்துத் திணைக்களத்தின் பொது முகாமையாளருக்கு அவர்கடிதம்அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில், தற்போது தொடருந்து சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நல்லூர்கந்தசுவாமிகோவில் பெருந்திருவிழா ஓகஸ்ட் 21 தொடங்கும்போது நாளாந்தம் இடம்பெறும் சேவைகளின் எண்ணிக்கையை அதிகரித்துஅடியவர்களின்பயணவசதிகளை இலகுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

# ரணிலின் முடிவு என்னவென பொறுத்திருந்து பார்ப்போம்

### சர்வகட்சிக் கூட்டம் குறித்து சம்பந்தன் இப்படிக் கருத்து



நாட்டு மக்களின் நன்மை கருதி - தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைக் கருதி - நல்ல முடிவை எடுக்கவேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரில்தெரிவித்துள்ளோம். அவர் என்ன முடிவை எடுப்பார் என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

இவ்வாறு இலங்கைத் தமிழ்அரசுக்கட்சியின்பெருந்தலைவரும்தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் புதன் கிழமை மாலை நடைபெற்ற சர்வகட்சிமாநாடுதொடர்பாகக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இது குறித்துஅவர்மேலும்தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல கட்சிகளின்தலைவர்கள்இந்த மாநாட்டுக்குவந்திருந்தார்கள். தேசிய நல்லிணக்கம் தொடர்பில் பலரும் தத்தமது கருத்துக்களைத் தெரிவித்தார்கள்.


பொதுவாகஇந்தப்பேச்சில் முன்னேற்றம் எதனையும் நாம் அவதானிக்கவில்லை. ஆனால், சமாதானமாக வழிநடத்தப்பட வேண்டிய விடயங்களில் பெரிய கருத்து வேறுபாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை.

கருமங்களை முன்னெடுப்பதற்குக் குழுக்களை ஜனாதிபதி நியமிப்பார் என எண்ணுகின்றோம்.

எங்களைப் பொறுத்தவரைக்கும் முக்கிய விடயங்களை ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளோம்.

» புதிய ☞ 2

## கிணற்றில் வீழ்ந்ததில் 4 வயது சிறுவன் சாவு



பாதுகாப்பற்ற கிணற்றில் விழுந்து நான்கு வயது சிறுவன்உயிரிழந்தான். புதன் கிழமை தாயார் நாளாந்த கூலி வேலைக்காகச் சென்றிருந்த பொழுது வீட்டில் தந்தையுடன் இருந்த சிறுவன் மதியம் 1:30 மணியளவில் தந்தையார் நித்திரையில் இருந்தபொழுது கிணற்றில் வீழ்ந்து இறந்தான் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நித்திரையால் எழுந்த தந்தை சிறுவனைத் தேடிய போது அவனைக் காணவில்லை. பின்னர்காணிக்குள் அமைந்திருந்த சுற்றுக்கட்டு இல்லாத மண் கிணற்றினுள் சிறுவன் வீழ்ந்து கிடந்ததைக் கண்டுபிடித்தார்.

உடனடியாகசிறுவனைக் கிணற்றிலிருந்து மீட்டு வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றபோதும் அவன் இறந்துவிட்டான்என்றுஅங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

செயலாளர் தயாசிறி ஜெயசேகர, மொட்டக் கட்சியின் செயலாளர் சாகர காரியவாசம், குமார வெல்கம, விமல் வீரவன்ஸ, உதய கம்பன்பில என்று எல்லோருமே தெளிவாக ரணில் ஏமாற்றுகின்றார் என்றே தெரிவிக்கின்றனர்.

சர்வகட்சிக் கூட்டம் குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது அவர்கள் எல்லோரும்தவறாமல்ரணில் எமாற்றுகின்றார் என்று சொல்கின்றனர். ரணிலின் வேசம் எல்லோரிடமும் வெளுத்துவிட்டது. தமிழர்கள் மட்டுமல்ல தெற்கிலும் எந்தத் தலைவரும் அவரை நம்புவதற்குத் தயாராக இல்லை என்கிற நிலைமையாகிவிட்டது.

ரணிலுக்கு 13ஐ நடைமுறைப்படுத்தும் நோக்கம் எதுவும் இல்லை, அதனை வைத்து அரசியல் செய்து வாக்குகளைச்சுருட்டுவதுதான் அவரது நோக்கம் என்றே பலரும் கருதுகின்றார்கள். வழக்கமாக ரணில்தான் இத்தகைய கூட்டங்கள் மூலம் தான் நினைத்ததைச் சாதிப்பார், இந்தத் தடவை அது தலைகீழாகியுள்ளது என்றார்.

இன்னும் சில மாதங்களில் உண்மை என்னவென்பது தெரியவந்துவிடும்தானே என்றபடி தொலைபேசி அழைப்பைத் துண்டித்துவிட்டேன் நான். ரணில் போன்ற மூளைசாலிகளின் நகர்வுகளை இப்படி எளிதில் எடைபோட முடியுமா என்பது எனக்கொரு பெரும் கேள்வி. வெளி உலகிற்கு வேறு ஒன்றைக் காட்டிக்கொண்டே உள்ளே வேறு ஏதாவது ஒன்றை நகர்த்திவிடும் ஆற்றல் கொண்டவர்கள் இவர்கள். இப்போது ரணில் எதற்காகக் காத்திருக்கிறாரோ தெரியவில்லை.

**இடிமின்னல்**
(idiminnal123@gmail.com)

## வட-கிழக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னார் மாவட்ட தலைவி மனுவல் உதயச்சந்திரா, யாழ்ப்பாணம் மாவட்ட தலைவி சிவபாதம் இளங்கோதை ஆகியோர் இணைந்துஇந்தஅழைப்பை விடுத்திருந்தனர்.

முழு அடைப்புப் போராட்டம் இடம்பெறுகின்ற அதே வேளை, முல்லைத் தீவில் கவனவீர்ப்புப் பேரணி ஒன்றும் இடம்பெறவுள்ளது. முல்லைத்தீவு நிதிமன்றத்திற்கு அருகில், இறுதிப் போரின்போது தமது உறவுகளை இராணுவத்தினரிடம் கையளித்த இடத்திலிருந்து இந்தக்கவனவீர்ப்புப்பேரணி தொடங்கவுள்ளது. முல்லைத்தீவு - மாங்குளம் வீதியூடாக மாவட்டச் செயலகத்தை இந்தப்பேரணியின்இறுதியில் கண்டன ஆர்ப்பாட்டமும் இடம்பெறவுள்ளது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிஉள்ளிட்டஅரசியல் கட்சிகளும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், ஆசிரியர் ஒன்றியம், கல்விசாரா ஊழியர்கள் ஒன்றியம் என்பனவும் மாவட்ட வர்த்தக சங்கங்களும், தனியார் போக்குவரத்து சங்கங்களும் இந்தப் போராட்டத்திற்கும் பேரணிக்கும்தமதுமுழுமையான ஆதரவைத்தெரிவித்துள்ளன.

இதனால் இன்று பாடசாலைகள் இயங்காது, அரச அலுவலங்கள்வங்கள்மட்டுப் படுத்தப்பட்டசேவைகளையே வழங்கம், போக்குவரத்து இடம்பெறாது கடைகள் அனைத்தும் அடைக்கப் பட்டிருக்கும்என்றுஎதிர்பார்க்கப்படுகின்றது.

## சீன....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரிய மீனவர்களின் கடற்பரப்புகளை தொழில் முறைகளில் இருந்து அகற்றி சீனாவுக்கு முழுக்கடலையும் தாரைவார்க்கப் போறீர்களா என்ற கேள்வி எழுகிறது.

ஏனெனில் பரம் பரை பரம்பரையாக சிறகு வலை தொழிலில் ஈடுபடும் மீனவர்களின் வாழ்வாதாரத்தை கேள்விக்குள்ளாக்கும் வகையில் கிளிநொச்சி மாவட்ட நீரியல் வளத்திணைகள உயர் அதிகாரி நேரடியாக சென்று சிறகு வலைகளை பிடுங்கியுள்ளார் .

இவ்வாறு பிடுங்கிய கிளிநொச்சி மாவட்ட கடற்தொழில் நீரியல் வள அதிகாரியிடம் பாசையூர் மற்றும் குருநகர்சிறகுவலைத்தொழிலாளர்கள் நேரடியாகச் சென்றுகேட்டபோதுஅதிகாரத் துணியில் நான் சட்டத்தை நடைமுறைப்படுத்துவேன் என கூறுகிறார்.

சிறகு வேலை தொழிலுக்கு அனுமதி எடுக்க வேண்டுமானால் குறித்த தொழிலாளர்களுக்கு ஏற்கனவே அறிவுறுத்தல் வழங்கி இருக்க வேண்டும்.

அவ்வாற இல்லாவிட்டால் குறித்த பகுதி மீனவ சங்கங்களுக்கு அல்லது யாழ்ப்பாண மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களத்துக்கு அறிவித்திருக்க வேண்டும். குறித்த பகுதியில் முறையற்ற சிறகு வலைகள் இருப்பதால் அதை அகற்றுமாறு கூறி இருக்க வேண்டும்.

கால அவகாசம் வழங்காமல் தான் நினைத்தபடி மக்களின் வாழ்வாதாரத்தை கண்டு கொள்ளாமல் கிளிநொச்சி மாவட்ட நீரியல்வளத் திணைக்களம் அதிகாரி செயற்பட்டமையை ஏற்றுக் கொள்ள முடியாது.

அவர் விரும்பினால் சீனாவுக்கு செல்லலாம் ஆனால் எமது மக்கள் பாரம் பரியமாக செய்து வரும் சிறகு வலைத் தொழிலை எமது கடற் பரப்பிலே செய்ய வேண்டும்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மீனவ மக்கள் ஒற்றுமையுடன் வாழ்ந்து வரும் நிலையில் அவர்களுக்கிடையில் விரிசலை ஏற்படுத்தி சீன அட்டப்பணையை கடலில் விதைப்பதற்கான நடவடிக்கையை குறித்த அதிகாரி மேற்கொள்கிறாரா என்ற சந்தேகம் எழுகிறது.

தமிழ் அமைச்சர் இருக்கிறார்தமிழ்அதிகாரிகள் இருக்கிறார்கள் ஏன் இந்த மக்களுக்கு சிறகுவலை தொடர்பில்விழிப்புணர்வூட்ட நடவடிக்கை எடுக்கவில்லை.

அதனை விடுத்து அரசியல்வாதிகளை எடுபிடியாக செயற்படும் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் எமது வளமான எமது கடற்பரப்பை சீன அட்டைப் பண்ணைக்காக தாரை வார்க்கும் செயற் பாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

பிடுங்கப்பட்ட பாசையூர் குருநகர் சிறகு வலை தொழிலாளர்களின் வலைகளை மனிதாபிமான முறையில் அந்த மக்களிடம் திருப்பி வழங்குவதற்கு அதிகாரி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இல்லாவிட்டால் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட மீனவர்களை இணைத்து எமது மீனவர்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதி தொடர்பில் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி ஏற்படும் - என்றார்.

## யாழ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நினைவேந்தலில் பல்கலைக்கழக மாணவர்கள் ஊழியர்கள் என பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

## ரணிலின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

» தமிழ் மக்களின் அபிலாஷைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

» வடக்கு - கிழக்கில் சரித்திர ரீதியாகத் தமிழ்பேசும் மக்கள் வாழ்ந்து வந்தார்கள் என்றஅடிப்படையில்அதியுச்ச அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும்.

-போன்றவிடயங்களை ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளோம்.

இந்தக் கருமங்கள் நிறைவேற முழுமையான ஒத்துழைப்பை நாங்கள் தங்களுக்கு வழங்கத் தயாராக இருக்கின்றோம் என்றும் ஜனாதிபதியிடம் கூறியுள்ளோம்.

முழுமையான உள்ளக சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படாவிட்டால்அதற்கு மாற்றீடாக நாங்கள் வெளியக சுயநிர்ணய உரிமையைக் கோருவோம். ஆகையால் இந்தக்கருமங்களைநாட்டின் நன்மை கருதி - நாட்டில் வாழ்கின்றமக்களின்நன்மை கருதி - தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைக் கருதி நல்ல முடிவை எடுக்க வேண்டும்என்றும்ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரில் தெரிவித்துள்ளோம். அவர்என்னமுடிவைஎடுப்பார் என்று பொறுத்திருந்து பார்ப்போம்.' - என்றார்.

(02)

# பாடசாலை மாணவர்கள் இருவர் மோ. சைக்கிள் விபத்தில் இறப்பு

மோட்டார்சைக்கிள்விபத்தில் பாடசாலை மாணவர்கள் இருவர் சாவடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் மொனராகலை, தம்பகல்ல பிரதேசத்தில் நேற்று மாலை இடம் பெற்றுள்ளது. இருவரும் பயணித்த மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி மின்கம்பத்தில் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் தம்பகல்ல பிரதேசத்தைச் சேர்ந்த தருஷ சந்தீப மற்றும் ருவன்வெல்ல பிரதேசத்தைச்சேர்ந்தசஸ்மித எஷான் ரணவீர ஆகிய பாடசாலை மாணவர்களே உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உறவினர்களானஇரண்டு மாணவர்களும் 16 வயதுடையவர்கள் என்றும் பொலிஸார் மேலும் குறிப் பிட்டுள்ளனர். (02)



## புத்தளத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்கிற பிரதான பதாகையை ஆர்ப்பாட்டக் காரர்கள் தாங்கியிருந்தனர்.

வீதியோரத்தில் திரண்டிருந்த பல நூற்றுக்கணக் கான ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசுக்கு எதிராக முழக்கமிட்டனர்.

காலமாக அதிகாரத்துக்கு வந்தஅனைத்துஆட்சிகளும் இனவாதத்தைத் தூண்டி மக்களுக்குள் பிளவுகளை உண்டாக்கினர். அத்தோடு மக்கள் மீது கடனைச் சுமத்தி பெரும் கஷ்டத்துக்கு உள்ளாக்கினர் என்றும் -

கறுப்பு ஜூலையும் ஈஸ்டர் தாக்குதலும் கடந்த காலங்களில் ஆட்சிக்கு வந்த மற்றும் தற்பொழுது ஆட்சியில் உள்ள ஆட்சியாளர்களின் பின்னணியில் தான் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.


**காலைக்கதிர்**
**ஆசிரியர்பீட**
**தொடர்புகளுக்கு**
**076 3983858**
**மின்னஞ்சல் முகவரி:**
kalaikkathirnews@gmail.com





காலைக்கதிர் Kalaikkathir

# மனிதப் புதைகுழி விடயத்தில் அரசு நீதியாக நடக்கவில்லை

## அருட்தந்தை மா.சத்திவேல் காட்டம்



மனிதப்புதைகுழிகள் விடயத்தில் அரசு நீதியாக நடந்து கொள்ளவில்லை என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அருட்தந்தை மா.சத்திவேல் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாயில் பாரிய மனிதப் புதைக்குழி கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில் காணாமலாக்கப்பட்ட தம் உறவுகளைத் தேடியும், நீதி கேட்கும் தொடர் போராட்டம் நடத்திவரும் வடக்கு- கிழக்கு காணாமலாக்கப்பட்ட உறவுகள் சங்கம் சர்வதேச நீதி கோரி வெள்ளிக்கிழமை வடக்கு, கிழக்கு முழுவதும் கடையடைப்பு ஹர்த்தால் செய்யுமாறு அழைப்பு விடுத்துள்ளது.

அத்தோடு அன்றைய தினம் அவர்கள் பேரணியும் நடத்த ஒழுங்கு செய்துள்ளனர். இதற்கு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு ஒத்துழைப்பு நல்குவதோடு அரசியல் நீதிக்காகக் கொடுக்கும் அனைத்து சக்திகளையும் ஆதரவு நல்குமாறும் கேட்டுக்கொள்கின்றது.

இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட பாரிய மனிதப் புதைகுழிகள் விடயத்தில் அரசு நீதியாக நடந்து கொள்ளவில்லை என்பதுவே உண்மை. குற்றவாளிகள் வெளியில் தெரியக்கூடாது. வெளியில் தெரிந்து நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டாலும் அவர்களுக்கு தண்டனை கிடைக்கக்கூடாது.

தண்டனைகிடைத்தாலும் தண்டனையைமுழுமையாக அனுபவிக்க கூடாது என்ற மனநிலையில் பேரினவாத ஆட்சியாளர்கள் மட்டுமல்ல அதே சிந்தனையுள்ள எதிரணியினரும் உள்ளனர்.

சமூகப் புதைகுழிகள் விடயத்தில் அரசியல் தலையீடு தொடர்ந்துள்ளது என்பதை அன்மையில் இது தொடர்பில் ஆராய்ந்த மூன்று அமைப்புக்களின் கூட்டு அறிக்கை வெளிகொண்டு வந்துள்ளது.

இந்நிலையில் இறுதியாகக் கண்டுபிடிக்கப்பட்ட கொக்குதொடுவாய் மனித புதைகுழியில் சீருடைகளோடு மனித எச்சம் காணப்படுகையில் சர்வதேச சட்டதிட்டங்கள், நியதிகள் என்பவற்றோடும் சர்வதேச நிபுணர் குழுவினரின் வழிகாட்டலோடும் புதைகுழி அகலப்படவும் ஆய்வு செய்ய வேண்டும். இதற்கான அழுத்தமாகவே ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்து பேரணி நடத்துகின்றனர்.

இனவாத வன் செயல்களால் கொல்லப்பட்டு யுத்தத்தில் கொல்லப்பட்டோரை நினைவு கூரக்கூடாது நினைவு கூர்ந்தாலும் மீண்டும் அவர்கள் வரப்போவதில்லை என்பதுவே தெற்கின் சிந்தனை.

கொழும்பில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் மற்றும் எண்பத்திமூன்று கறுப்பு ஜூலை நினைவேந்தல் நடத்தப்பட்ட போது அங்கு குழப்புவதற்காக வந்த குண்டர்கள் கூடினர். அதுவே பேரினவாத மற்றும் மதவாத அரசியல் வாதிகளினதும் கருத்தியல். தமிழர்களுக்கு இனி எத்தகைய நீதியும் இலங்கையில் கிடைக்கப் போவதில்லை இதுவே இன்றைய சூழ்நிலை.

இத்தகைய பின்னணியில் யுத்த குற்றங்களுக்கும், காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளுக்கும், கண்டுபிடிக்கப்படும் மனித புதைகுழிகளின் ஆய்விலும் இலங்கையில் நீதியை அடைய முடியாது. சர்வதேச தலையீடு அவசியம் என்பதை வலியுறுத்தி காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் சங்கம் நடத்தும் கடை அடைப்புக்கும், பேரணிக்கும் தாயகத் தமிழர்கள் ஆதரவு வழங்குவதே அரசியல் நீதி. - என்றார். (05)

# வவுனியா மக்கள் அச்ச நிலையில் வாழ்வதற்கு பொலிஸாரே காரணம்

## திலீபன் எம்.பி. குற்றச்சாட்டு



வவுனியா மாவட்டத்தில் மக்கள் அச்சத்தோடு வாழ வேண்டிய சூழ்நிலைக்கு முழு காரணம் பொலிஸாரே என வவுனியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான குலசிங்கம் திலீபன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

கடந்த இரண்டு மாதங்களாக வவுனியா மாவட்டத்திலே மக்கள் அச்ச உணர்வுக்கு மத்தியில் வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு முற்றுமுழுகாரணம் பொலிஸார் தான். வவுனியா மாவட்டத்திலே இருக்கின்ற நகர பொலிஸ் நிலையம் மற்றும் அங்கு இருக்கக்கூடிய குற்றத் தடுப்புப் பிரிவு இந்த இரண்டிலேயும் மக்களுக்கான நம்பிக்கை தற்போது இழந்த நிலைமையே காணப்படுகின்றது.

இது தொடர்பாக நாங்கள் வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கின்றோம்.

இது தொடர்பாக ஜனாதிபதியிடமும் முறையிட இருக்கின்றோம். இந்த குற்றச்செயல்கள் கட்டாயம் தடுக்கப்பட வேண்டும்.

கடந்த காலங்களில் ஒருவர் அல்லது இரண்டு பேர்கள் குற்ற செயல்களில் ஈடுபட்டதை அறிந்திருக்கின்றோம்.

தற்போது பத்து, பதினைந்து பேர் ஒன்றாக சென்று ஒரு வீட்டுக்குள்ளே புகுந்து வெட்டி எரித்துள்ளனர்.

குறித்த சம்பவத்தில் இன்று வரைக்கும் ஒருவர் கூட சந்தேகத்தின் பேரில் கூட கைது செய்யப்படவில்லை என பொலிஸ் ஊடகபேச்சாளர் கூறி இருக்கிறார்.

எனவே, நாங்கள் இவர்கள் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை சரிவர கண்காணித்து கொண்டு தான் இருக்கிறோம். சில விமர்சனங்கள் இருக்கின்றது. அதனை உரிய இடங்களுக்குதெரிவிப்போம். -என்றார். (05)

# காட்டுத் தீயைக் கட்டுப்படுத்த பதுளை மாவட்டத்தில் ஏற்பாடு

பதுளை மாவட்டத்தில் நிலவும் வறட்சியான காலநிலையை சாதகமாகக் கொண்டு விஷமிகள் காடுகளுக்கு தீ வைக்கும் செயற்பாடுகள் அதிகரித்துவருவதாக பதுளை மாவட்ட செயலாளர் பிரபாத் அபேவர்தன தெரிவிக்கின்றார்.

பதுளை மாவட்டத்தில் காடுகளுக்கு தீ வைக்கும் செயற்பாட்டை தடுப்பதற்கான முன்னாயத்த நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்வது என்பது தொடர்பாக ஆராயும் கூட்டம் பதுளையில் உள்ள தனியார் விருந்தகமொன்றில் நடைபெற்ற போது கூட்டத்துக்கு தலைமை தாங்கி உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பதுளை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுதர்ஷன தெனிபிட்டிய, மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலாளர்கள், வன பாதுகாப்பு, வனவிலங்கு பராமரிப்பு திணைக்களங்களின் பணிப்பாளர்கள், மாவட்டத்தில் உள்ள முப்படைகளின் உயரதிகாரிகள், மாவட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவர் உட்பட முக்கிய திணைக்களங்களின் அதிகாரிகளும் கூடத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர் -

இதுவரையான காலப் பகுதியில் 60 கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள காடுகளுக்கு தீ வைக்கப்பட்டுள்ளதாக எமக்கு தகவல் கிடைத்துள்ளது. சிலவேளை இத்தொகை இன்னும் அதிகமாக இருக்கலாம். காடுகளுக்கு தீ பரவும் போது அதை அணைப்பதற்கு பொதுமக்கள் வழங்கும் பங்களிப்பு மிகவும் குறைவாக உள்ளது. அவர்கள் தீயால் பாதிக்கப்படும் காட்டு விலங்குகளை வேட்டையாடுவதில் அதிக கவனம் செலுத்துவதிலும், சம்பவத்தை வீடியோ எடுத்து சமூக வலைதளங்களில் பதிவேற்றுவதிலுமே ஆர்வம் காட்டுகின்றனர். இது சமூகம் என்ற வகையில் நாம் வெட்கப்பட வேண்டிய விடயம். இன்னும் இரு மாதங்களுக்கு வறட்சியான காலநிலையை மாவட்டத்தில் நிலவும். ஆகையால் இந் நாசகார செயற்பாட்டைத் தடுத்து நிறுத்த ஒன்றிணைந்த வேலைத் திட்டம் அவசியம். - என்றார்.

இதன் போது கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்ஷன தெனிபிட்டிய -

கடந்த ஞாயிற்றுக் கிழமை எல்ல பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சுற்றுலாப் பயணிகளை கவரும் மூன்று இடங்களில் நாசகார கும்பலால் ஒரே சமயத்தில் காடுகளுக்கு தீ வைக்கப்பட்டது. இதன் காரணமாக எல்ல நகர் பகுதியில் உள்ள குடியிருப்புகள், 'நைன்ஆச் ' எனப்படும் 9 வளைவுப் பகுதி, பொலிஸ் நிலையப்பகுதி என்பவற்றுக்கு கடும் பாதிப்பு ஏற்பட்டதுடன் ரயில் கடவைகளுக்கும் தீ பரவும் அபாயம் ஏற்பட்டது.

இறுதியில் விமானப்படையினரின் ஹெலிகாப்டர் மூலம் தீ பரவல் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது. - என்றார்.

இதனை தடுக்க பிரதேச செயலக மட்டத்தில் கிராம சேவை உத்தியோகத்தர்கள் ஊடாக சிரமதானப் பணிகளை முன்னெடுக்கவும், ரயில் கடவைகளின் இரு மருங்கையும் துப்புரவு செய்யவும், வணக்க ஸ்தலங்களில் பயன்படுத்தப்படும் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தி காட்டுத் தீ தொடர்பாக மக்களை தெளிவுப்படுத்தவும், பொலிஸ் மற்றும் இராணுவத்தின் உதவியுடன் அனர்த்த பிரதேச மக்களின் வீடுகளுக்கு சென்று தெளிபடுத்தவும், சிவில் பாதுகாப்பு குழுக்களை பயிற்சியுடன் தயார்படுத்தவும், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் இவ்விடயம் தொடர்பாக தகவல் தொடர்பு அலகினை ஏற்படுத்தவும், பயர்பெல்ட், பயர்பெல்களை அமைக்கவும், அனர்த்த பிரதேசங்களை முன்கூட்டி அடையாளம் கண்டு பாதுகாப்பு முன் ஏற்பாடுகளை மேற்கொள்ளவும் , மாவட்டத்தில் உள்ள தோட்ட முகாமையாளர்களுடன் கலந்துரையாடி தோட்டங்களைப் பாதுக்கவும், காடுகளுக்குள் உள்ள நடைபாதைகளை அடையாளப்படுத்தவும், சந்தேக நபர்களை அடையாளம் காண பொதுமக்கள் உதவி பெறவும் கலந்துரையாடலில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. (05)

# மிஸஸ் எர்த் இன்டர்நஷனல் – 2023 வென்ற சஷ்மி நாடு திரும்பினார்



மிஸஸ் எர்த் இன்டர்நஷனல் - 2023 பட்டத்தை வென்ற அம்பாறையைச் சேர்ந்த 21 வயதான திருமதி சஷ்மி திஸாநாயக்க புதன்கிழமை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தார்.

45 நாடுகளைச் சேர்ந்த 60 போட்டியாளர்கள் பங்கேற்ற இந்தப் போட்டி இம்மாதம் 17 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை பிலிப்பைன்ஸின் மணிலாவில் நடைபெற்றது.

இதன்போது திருமதி சஷ்மி திஸாநாயக்க இந்த போட்டியின் 4 துணைப் போட்டிகளை வென்றார், இதன் மூலம் மிஸஸ் எர்த் இன்டர்நஷனல் அழகியாகத் தெரிவானார்.

"எனது வெற்றி குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இதன் காரணமாக எனது நாட்டை உயர்ந்த இடத்துக்கு கொண்டு செல்ல முடிந்தது. நான் தனியாக இந்தப் பயணத்தை ஆரம்பிக்கவில்லை.

'ஆசிரியர் ருக்மல் சேனாநாயக்க, தேசிய இயக்குனர் சரித் குணரத்ன மற்றும் தயாரிப்பாளர் இசுரு குணசேகர ஆகியோர் இந்த சாதனைக்கு எனக்கு உதவினார்கள். மேலும் எனது பெற்றோரும் எனது கணவரும் நிறைய உதவினார்கள்" என்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் ஊடகவியலாளர்கள் முன்னிலையில் பேசும்போது திருமதி சஷ்மி திஸாநாயக்க தெரிவித்தார். (05)

## வவுனியா இரட்டைக் கொலை நடந்த வீட்டில்

# இரசாயனப் பகுப்பாய்வாளர்கள் கொழும்பிலிருந்து வந்து ஆய்வு

வவுனியாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வாள் வெட்டு தாக்குதல் மற்றும் வீடொன்றுக்கு தீ வைத்த சம்பவத்தில் 21 வயது குடும்பப்பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தமையைத் தொடர்ந்து, படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த அவரது கணவனும் சிகிச்சை பயனின்றி புதன்கிழமை காலை உயிரிழந்தார்.

அதனையடுத்து, தீ வைக்கப்பட்ட வீட்டை கொழும்பில் இருந்து சென்று பார்வையிட்ட பொலிஸ் தரப்பு இரசாயன பகுப்பாய்வாளர்கள் புதன்கிழமை சோதனை செய்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வவுனியா, தோணிக்கல் பகுதியில் உள்ள வீடொன்றினுள் நுழைந்த 10 பேர் கொண்ட குழு, வீட்டில் இருந்தவர்கள் மீது வாள்வெட்டுதாக்குதலில் ஈடுபட்டதுடன், வீட்டுக்கும் பெற்றோல் ஊற்றி தீ வைத்து விட்டு தப்பிச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் 21 வயது இளம் குடும்பப்பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியானதுடன், சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 10 பேரில் குறித்த பெண்ணின் கணவரான 32 வயதுடைய இளம் குடும்பஸ்தர் புதன்கிழமை அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் பல்வேறு கோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்து வரும் நிலையில், குறித்த வீடு எரியூட்டப்பட்டமை மற்றும் அங்கு எரிந்த பொருள்கள் தொடர்பில் இரசாயன பகுப்பாய்வை மேற்கொள்வதற்கு கொழும்பில் இருந்து விசேட பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று பார்வையிட்டு இரசாயன பகுப்பாய்வு மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் பல்வேறு தரப்புகளிடம் வாக்குமூலம் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மருத்துவப் புறக்கணிப்பு மீதான அலட்சியம்

**கிளிநொச்சியைச் சேர்ந்த தந்தை ஒருவர் தனது குழந்தையை இழந்த சோகத்துடனும் இனிமேல் குழந்தை ஒன்றைப் பெற்றுக்கொள்ள முடியாத விசனத்துடனும் மருத்துவப் புறக்கணிப்புக் குறித்து கண்ணீருடன் கேள்வி எழுப்பியுள்ளார். அவரது துயரம் இலங்கையில் மருத்துவப் புறக்கணிப்புத் தொடர்பான சட்டங்கள் தீவிரப்படுத்தப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி நிற்கின்றது.**

**தனது மனைவியை கிளிநொச்சி வைத்தியசாலையில் குழந்தைப் பேறுக்காகச் சேர்க்கச் சென்றபோது அவரைப் பரிசோதித்த மருத்துவர் குறிக்கப்பட்ட நாளுக்கு இரண்டு நாட்கள் பின்பாக வருமாறு தெரிவித்துள்ளார். அதற்கு முன்னர் ஊடுகதிர்ப் (ஸ்கான்) பரிசோதனைக்குச் சென்றபோது குழந்தையின் வளர்ச்சி அபரிமிதமாக இருப்பதால் ஆடி 12 வைத்தியசாலையில் சேரும்படி மருத்துவர் அறிவுறுத்தியிருந்தார். அந்த நாளில் சென்றபோதே, ஆடி 26 வருமாறு திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.**

**ஆடி 26 வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டவருக்கு குழந்தைப்பேறு வலி ஏற்படுவதற்கான மருந்து ஏற்றப்பட்டது. எனினும் நண்பகல் 12.30 மணி முதல் அவருக்கு குருதிப் போக்கு ஏற்பட்டதுடன் தனது வயிற்றில் குழந்தையின் துடிப்புக் குறைவதையும் உணர முடிந்திருக்கிறது. அது குறித்து அங்கிருந்த மருத்துவப் பணியாளர்களிடம் தெரிவித்தபோதும் அவர்கள் அக்கறைகாட்டவில்லை என்றும் இரவு 7.40 மணிவரையில் எந்தவொரு மருத்துவரும் தனது மனைவியை நேரில் பரிசோதிக்கவில்லை என்றும் கடைசியில் மனைவியை சத்திரசிகிச்சைக்கு உட்படுத்திய மருத்துவர்கள் குழந்தையைக் காப்பாற்ற முடியவில்லை என்றும் மனைவியின் கர்ப்பப் பையை அகற்றிவிட்டோம் என்றும் தெரிவித்திருக்கிறார்கள்.**

**மருத்துவர்களின் கவனக்குறைவும் புறக்கணிப்புமே இந்த இறப்புக்கும் இழப்புக்கும் காரணம் என்று அந்தத் தந்தை குற்றஞ்சாட்டுகின்றார். தனக்கு நீதி கிடைக்க வழியே இல்லையா என்றும் கேள்வி எழுப்புகின்றார். அவரது வழக்கில் மருத்துவப் புறக்கணிப்பு இடம்பெற்றதா இல்லையா, குழந்தையின் இறப்புக்கும் அவரது மனைவியின் கர்ப்பப் பை இழப்புக்கும் மருத்துவப் புறக்கணிப்புத்தான் காரணமா என்பது தெரியாது. விசாரணைகள் மூலமே அது உறுதிப்படுத்தப்படவேண்டும். அதற்கான நீதியான விசாரணைகள் நடத்தப்படுவதற்கான வாய்ப்புக்களை இலங்கை சட்டத்துறை கொண்டிருக்கின்றதா என்பதே அந்தத் தந்தையின் அழுகுரல் எழுப்பும் கேள்வி.**

**மேற்கு நாடுகள் பலவற்றிலும் மருத்துவப் புறக்கணிப்பு பெரும் குற்றமாகக் கருதப்படுகின்றது. அதற்காகக் கடுமையான தண்டனையும் அபராதமும் விதிக்கப்படுகின்றது. ஆனால் இலவச மருத்துவ வசதிக் கட்டமைப்பைக் கொண்டுள்ள இலங்கையின் அரச சுகாதாரத் துறையில் அத்தகைய வசதிகள் நோயாளர்களுக்குக் கிடைக்கவில்லை. மருத்துவப் புறக்கணிப்புத் தொடர்பில் கடுமையான சட்டதிட்டங்கள் எவையும் இல்லை. இதனால் பல சமயங்களில் மருத்துவப் புறக்கணிப்பால் ஏற்படும் இழப்புக்களுக்கு யாரும் பொறுப்புக் கூற வேண்டிய தேவை இல்லை.**

**குறிப்பாக தவறான மருந்துப் பயன்பாடுகளால் நோயாளர்களுக்கு ஏற்படும் இழப்புகளுக்கு குறைந்தபட்சம் இழப்பீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் கூட இல்லாமல் இருக்கின்றது. கிளிநொச்சியில் இருந்து எழும் அந்த அப்பாவித் தந்தையின் குரலைத் தொடர்ந்தாவது இது விடயத்தில் ஆட்சியாளர்கள் விழித்துக்கொண்டு புதிய சட்டங்களை உருவாக்குவதற்கு முயற்சிக்கவேண்டும். நோயாளர்களின் நலன்களிலும் அக்கறை செலுத்தப்படவேண்டும்.**

# இதுவா இராஜதந்திரம்?

**என். சத்திய மூர்த்தி**



பதின்மூன்றாவதுதிருத்தத்தை செயல்படுத்துவதற்காக அனைத்து கட்சி கூட்டத்திற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கே அழைப்பு விடுத்ததே அதனை முடக்கு-வதற்குத்தான். பேச்சு தோல்வி அடைந்ததைக் காரணம் காட்டி, இந்தியாவின்வாயைஅடைப்பதும் அவரது திட்டத்தில் அடங்கும். அது சதி திட்டமா, அல்லது தீர்வுதிட்டமா, என்பது தமிழ்-சிங்கள அரசியல் தளத்திற்குள் அடங்கிவிடும்.

பத்திரிகை செய்திகளின் படி, சுமந்திரனுடனான வாக்குவாதத்திற்கு பின், ஜனாதிபதி, தடாலடியாக கூட்டத்தை முடித்துக்கொண்டு அந்தக் கூட்டத்தில் இருந்து வெளியேறினார். அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு, வெற்றியும்பெறவேண்டும் என்ற ஆசையில், அவர் சிங்கள-பௌத்த பேரினவாதியாகத் தன்னை காட்டிக்கொண்டிருக்கிறார். அவ்வளவுதான்.

ரணிலைப் பொறுத்தவரை, கடந்த ஆண்டு பொருளாதார சிக்கல்



களில் இருந்து நாட்டை மீளெழுப்பி உள்ளார் என்ற கருத்து வலுப்பெற்று வருகிறது. இந்தப் பின்னணியில், இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற சிக்கலான ஆயுதத்தை அவர் இந்த அளவிற்காவது கையில் எடுத்ததே, அண்மையில் நடந்தேறிய இந்தியப் பயணத்தால்தான்.

புது டெல்லியில், பிரதமர் நரேந்திர மோடியிடம்இந்தியா சம்மந்தப்பட்ட பதிமூன்று குறித்தாவது கதைக்காமல் இருக்கமுடியாது என்ற நிர்பந்தத்தினால்தான், ரணில், அந்த பயணத்திற்கு இரண்டுநாள்கள் முன்னர், வடக்கு கிழக்கைச் சேர்ந்த அனைத்துத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் உரையாடினார். அந்தக் கூட்டத்தைப் போலவே அனைத்துக் கட்சி கூட்டமும் தற்போது எந்த முடிவும் எடுக்காமலே கலைந்துள்ளது. இதுவும் எதிர்பார்க்கப்பட்ட விடயமே.

### மிதவாதி நாடகம்

பொருளாதாரத்தை முன்னிறுத்தி ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றுவிடலாம் என்ற ரணிலின் நம்பிக்கையை அவரது இந்தியப் பயணம் தகர்த்துவிட்டது எனலாம். எப்போது, தேர்தல், பொருளாதாரத்தையும் தாண்டி அரசியல் பிரச்சினைகளையும் உள் வாங்குகிறதோ, அப்போதே இனப்பிரச்சினை முன்னால் வந்து விழுந்துவிடுகிறது.

இந்த விடயத்தில், ரணிலைவிடப் பெரிய, பெரிய பேரினவாதிகள் தென்னிலங்கை அரசியல் தளத்தில் விளையாடிவருகிறார்கள். மனத்தளவில், ரணிலும் பேரினவாதியே. ஆனால், சர்வதேசத்திற்காகதன்னைஒருமிதவாதியாகவே காட்டிவந்துள்ளார். ஆனால், ஜனாதிபதி தேர்தல் என்று வந்த பிறகு, அவர் பேரினவாதியோ இல்லையோ, அவரது மிதவாதி நாடகம் எடுபடாது.

இந்த காரணத்தினால் பொருளாதாரம் போய், இனவாதம் ஜனாதிபதித் தேர்தலின் முக்கிய பேசுபொருளாக மாறிவிடும் வாய்ப்பு உள்ளது. இதனை உணர்ந்து கொண்டதால்தான், ரணில், இவ்வாறு, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருடன் தடித்துப் பேசி, அந்தபேச்சுக்கேமுழுக்குப்போட்டுள்ளார்.

இதில், அவர் இரண்டாம் சுற்று பேச்சுக்கு அழைப்பு விடுப்பார் என்று எதிர்பார்க்கமுடியாது. என்றாலும், ரணிலின் மனவோட்டத்தை கணிப்பது அவ்வளவு எளிதல்ல.

### இரட்டை நாயனம்

என்ன,முந்தையகூட்டம்முறிவதற்கு சம்மந்தன்காரணமாகஇருந்தார்,அல்லது அவ்வாறுகாட்டப்பட்டார். தற்போது, அந்த பற்றத்தை, சம்மந்தனின் பிரதமசீடரான சுமந்திரன் ஏற்றுக்கொண்டுள்ளார். இதன் மூலம், மற்றவர்களைவிட, தாங்கள் இனப்பிரச்சினையில் அதிக ஈடுபாடு உள்ளவர்களாக இருவரும் காட்டிக்கொள்ளமுயன்றால்அதுஎடுபடும் என்று தோன்றவில்லை.

காரணம், முந்தைய மைத்திரிபால சிறிசேனா அரசில் பிரதமராக இருந்த ரணிலுக்கு முட்டுகொடுத்து அவரது ஆட்சியை நிலைபெற செய்ததே, இந்த இருவரும்தான். உண்மை என்னவோ, அன்று ஒன்றாக இருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவர்களது கட்சிகளும்கூட அவர்களது நிலைப்பாட்டைக்கேள்விகேட்கவில்லை.

மாறாக, கூட்டமைப்பின் பிற அங்கத்துவக் கட்சிகள், இந்த இருவரின் இரட்டை நாயனத்திற்கு ஒத்து ஊதின. அப்படி, ரணில் என்ன சொக்குப்பொடி போட்டார் என்று இன்றளவும் தெரியவில்லை. ஆனால், அன்று சம்மந்தன்-சுமந்திரன், தற்போது அவர்களின் தமிழ் அரசு கட்சி தவிர்த்த முன்னாள் கூட்டமைப்பு அங்கத்துவ கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், ரணிலுக்கு பலமாக ஜால்ரா அடிக்கிறார்கள். சிலரது ஜால்ரா வெளியே தெளிவாகக்கேட்கிறது. வேறு சிலரது அவரது காதுகளுக்கு மட்டுமே குளிர்ச்சி அளிக்கும் வண்ணம் மெதுவாகவே ஒலிக்கிறது. இதுதான் இரு தரப்பினரிடையே உள்ள வித்தியாசம்.

இதில், கஜேந்திர குமார் பொன்னம்பலம் மட்டுமே விதிவிலக்கு. 'அடைந்தால்மஹாதேவி, இல்லையேல் மரணதேவி' என்றஅவரது'மஹாதேவி'காலகொள்கை பிடிப்பிற்குகுறைந்தஅளவிலேயேஆதரவு இருக்கிறது என்பது வேறு விடயம். ஆனால், அதுவும்கூட, தற்போதைய சூழலில், தமிழ் இளைஞர்கள் தங்களது குடும்பங்கள் தலைமுறைகளாக ஆதரித்து வந்த பிற அரசியல் கட்சிகளை விட்டுவிலகிச்செல்லக் காரணமாகலாம். அதற்காக அவரை ஆதரிப்பார்கள் என்று கருத இடமில்லை.

இந்தப் பின்னணியில், சம்மந்தன்-சுமந்திரனின் பேச்சு அரசியல் முஸ்தீபுகள் மற்றும் முன்னெடுப்புகள், இராஜதந்திரமானதுதானா, என்றகேள்விஎழுகிறது. குறிப்பாக, இந்த முறை, அனைத்து கட்சிகூட்டத்தில்கிடைத்தவாய்ப்பை அவர்கள் தவறவிட்டு விட்டார்கள் என்றே கூற வேண்டும்.

அவ்வாறு இல்லாது, வாய்ப்பை சரியாக பயன்படுத்தி இருந்தால், சுமந்திரனும் பிறரும், ரணிலோடு நிறுத்திவிடாமல்,பிறதென்னிலங்கை கட்சிகளையும் அம்பலப்படுத்தி இருக்க முடியும். அல்லது, இவர்கள் கோரும் சமஷ்டி குறித்த அவர்களது நிலைபாட்டை அந்தக் கட்சித் தலைமைகள் பொதுவெளியில் பிரகடனப்படுத்த வகைசெய்திருக்கவேண்டும்.

### பாம்பின் கால்

அந்த வகையில், சுமந்திரனின் கேள்விகள், சஜித் பிரேமதாஸவையும் குறி வைத்திருக்கவேண்டும். அது போன்றே, கனகாலமாகத்தமிழர்எதிர்ப்பு நிலை எடுத்துவரும், விமல் வீரவன்ஸ, உதய கம்மன் பில்ல ஆகியோரது பொதுவெளி நிலைபாடுகளும் நான்கு சுவர்களுக்குள்ளேயும் எதிரொலித்திருக்க வேண்டும். அவ்வாறெல்லாம் செய்யாமல், எடுத்தோம்-கவிழ்த்தோம் என்ற அணுகுமுறையால், குறிப்பாக சஜித் தலைமை, சமஷ்டி மற்றும் இனப் பிரச்சினை, பதிமூன்று ஆகியவிடயங்கள் குறித்து கருத்து சொல்லாமலே, மாகாண சபைத் தேர்தல்கள் குறித்து மட்டும் பேசிவிட்டு சென்றுவிட்டார். அல்லது, அதற்கான வாய்ப்பை சுமந்திரன் ஏற்படுத்தி கொடுத்து விட்டார்.

ரணிலிடம் யாராவது இது குறித்து கேட்டால், இதுசஜித்மற்றும்சுமந்திரனின் கூட்டுசதி என்றுகூட வாய்கூசாமல் சொல்வார். பாம்பின் கால் பாம்பு அறியும்தானே?

### எதிர்கால சந்ததியினர்

தமிழர்களுக்கு தற்போது நான்கு அல்லது ஐந்து குறிப்பிட்ட பிரச்சினைகள் உள்ளன. அரசியல்தீர்வு, போர்குற்றங்கள், அரசியல் கைதிகளின் விடுதலை, கடந்த மூன்று ஆண்டுகளாக அரசே முன்னெடுக்கும் கலாசார அழிவுகள், அதில் அண்மை காலமாக நேரடியாக பங்கெடுக்கும் பேரினவாதிகள். இவற்றின் முக்கியத்துவத்தை வரிசைப்படுத்தி, அவற்றை எவ்வாறு முன்னெடுக்க வேண்டும் என்பதனை அவர்கள் முடிவு செய்யவேண்டும். இது ஓரிருவர் அல்லது ஐந்து-பத்துபேர் மட்டும் சார்ந்த விடயமல்ல. அது போன்றே. இது வயதானவர்களுக்கான விடயம் மட்டுமல்ல. மாறாக, எதிர்காலம் சார்ந்தவை. எதிர்கால சந்ததியினரையும் பாதிப்பவை.

இந்தப் பின்னணியில், எதிர்காலச் சந்ததியினரை எவ்வாறு உள்வாங்கி அவர்களையும் சமுதாய அரசியலில் பங்குதாரர்களாகவும் தலைவர்களாகவும் இணைத்துக்கொள்வது என்பதில் அக்கறை செலுத்த வேண்டும். தற்போதைய தலைமைகளுக்கு அது ஏற்புடையது இல்லை என்பது தெரிந்த விடயம்.

இல்லையென்றால், அவர்கள் ஒப்பீட்டளவிலேனும் இளம் வயதினரான சுமந்திரனை முன்னிறுத்தி, கூட்டமைப்பு அரசியலை குழப்பி இருக்கமாட்டார்கள். அது போன்றே சாணக்கியனையும் எதிர்கால அரசிய-லுக்காக சரியாக தயார்படுத்தாமல் விட்டிருக்கமாட்டார்கள்.

தற்போது, சுமந்திரன் தமிழர் தலைவர்களில் சர்வதேசத்திடம் பிரபலம். ஆனால், உள்வீட்டு விவகாரங்களில் இன்னும் பொறுமையும் பொறுப்புணர்ச்சியும் அவருக்கு தேவைபடுகிறது. அதுபோன்றே, சாணக்கியனும், சிறந்த மேடை பேச்சாளர், நாடாளுமன்ற விவாதிப்பாளர் என்பதற்கு அப்பாலும் அறியப்படவேண்டும்.

### பழம் பெருச்சாளிகள்

இவர்களுக்கு அப்பால். கஜேந்திர குமார்பொன்னம்பலமும்தனது அரசியல் கொள்கை மற்றும் அணுகுமுறையை மாற்றிக்கொண்டால், சிறந்ததலைவராக வரவாய்ப்புள்ளது. தான்பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்றும், என்று தமிழ் அரசு கட்சியும் பிறரும் ஏற்றுக்கொள்ளும் மிதவாத அணுகுமுறையை பழிப்பதும் மட்டுமே அரசியலாகிவிடாது.

அவ்வாறேனும், அவருக்கு ஒரு மித்த தமிழர் ஆதரவு இருக்கிறது என்பதை அவர் நிரூப்பித்திருப்பாரேயானால், கதையே வேறாகி இருக்கும். இனப்போர் முடிந்த இந்த பதினான்கு ஆண்டு காலத்திலும் அவரால் அவ்வாறு நிரூபிக்க முடியவில்லை. அதுபோன்றே, தனது சுயாட்சி மற்றும் பொது ஜன வாக்கெடுப்பு சார்ந்த கோரிக்கைகள் மிதவாத அரசியல் என்று அவர் முடிவு செய்வதும் தவறானே போக்கே.

இதனாலெல்லாம் இழப்பு தமிழ் இனத்திற்கே. மாறாக, கஜன், சுமந்திரன்,



சாணக்கியன் போன்றோர் சேர்ந்து இயங்குவார்களேயானால், பழம் பெருச்சாளிகள் காணாமலேகூட போக வாய்ப்பு உண்டு. இந்த பழம் பெருச்சாளிகளை கிழட்டு சிங்கங்கள் என்று கூறியாராவது சந்தோஷபட நினைத்தால் அது அவர்களது நிலைப்பாடு.

### பெருந்தலைவர்

அண்மை காலமாக, குறிப்பாக கூட்டமைப்பு சிதறுண்ட பின்னர், தமிழ் பத்திரிகைகள் மற்றும் தொலைகாட்சி மற்றும் யூ-டியூப் உள்ளிட்ட சமூக ஊடக துறையினர், சம்மந்தனை தமிழினத்தின் 'பெருந்தலைவர்' என்ற அடைமொழியுடன் அழைக்க தொடங்கி உள்ளனர். மரியாதைக்குரிய அவர், கூட்டமைப்பு சிதறுண்டவுடன் தனக்கு என்று எந்தவொரு அரசியல் தலைமை பொறுப்பும் இல்லாமல் நட்டாற்றில் விடப்பட்டார் என்பதே இதற்கான காரணம்.

சம்மந்தனின் பங்களிப்பையும், தலைமைத்துவத்தையும் அர்பணிப்பையும் யாரும் கேள்வி கேட்டுவிடமுடியாது. கேலி செய்யவும் முடியாது. அவ்வாறான தனித்துவமுள்ள இடத்தில் இருக்கும் சம்மந்தனை பெருந்தலைவர் என்று அழைப்பது பொருத்தமே. அந்த வகையில், சம்மந்தனும், தன்னை ஒரு குறிப்பிட்ட வட்டத்தினுள் அடக்கிக்கொள்ளாமல், பெருந்தலைவர் என்ற பட்டத்திற்கு ஏற்ப செயல்படவேண்டும். இனியாவது அடுத்த தலைமுறையை பற்றி மட்டும் கவலைப்படாமல், அடுத்த தலைமுறைத் தமிழ்த் தலைமைகள் குறித்தும் முன்னெடுப்புகளை செய்யவேண்டும்.

ஆனால், அந்த முன்னெடுப்பு சுமந்திரனோடு நின்றுவிட்டது என்பதே நிதர்சனம். காரணம், சம்மந்தனின் மற்றொரு கண்டுபிடிப்பான விக்னேஸ்வரன் அவரது முதுகில் குத்தினார் என்பது மட்டுமல்ல. அவரே கூட இளைஞரும் அல்ல. அரசியல் முதிர்ச்சி பெற்ற தலைவரும் அல்ல.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swshpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# மக்கள் தொடர்பாடல் அலுவலகம் வடக்கு ஆளுநரால் திறந்து வைப்பு









வடமாகாண ஆளுநரின் மக்கள் தொடர்பாடல் அலுவலகம் ஆளுநர் திருமதி பி.ஸ்.ம்.சாள்ஸால் வவுனியா நகரசபை நூலகக் கட்டடத்தில் புதன்கிழமை காலை திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளை சேர்ந்த மக்கள்ஆளுநரை சந்திப்பதற்குநீண்ட தூரம் பயணித்து யாழ்ப்பாணம் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ள நிலையில்மக்களின்நலனைக்கருத்தில் கொண்டு அலுவலகமானது அமைக்கப்பட்டுள்ளமையுடன் வாரநாள்களில் மக்கள் தமது முறைப்பாடுகளை இந்த அலுவலகத்தில் தெரிவிக்க முடியும் என்பதுடன் மாதத்தில் இரு தடவைகள் ஆளுநர் இங்கு விஜயம் மேற்கொண்டு மக்களை சந்திப்பார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நிகழ்வில் வடமாகாண பிரதமசெயலாளர்சமன்பந்துலசேன, வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிரஞ்சன் , உள்ளூராட்சி அதிகாரிகள் , ஆளுநர் அலுவலக அதிகாரிகள் , நகரசபை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (05)

## கிளிநொச்சி சித்த மத்திய மருந்தகத்தில் குரங்கு தொல்லையால் சேவை பாதிப்பு!



கிளிநொச்சி சித்த மத்திய மருந்தகத்தில் குரங்கு தொல்லை காரணமாக மருத்துவ சேவை முன்னெடுப்பதில் பாரிய சிக்கல் நிலை காணப்படுவதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

பகல் மற்றும் இரவு வேளைகளில் குரங்குகள் மருந்தகத்துக்குள் நுழைந்து மருந்தகத்தை சேதப்படுத்துவதால் பல மருந்துகள் பயன்படுத்த முடியாத நிலையில் வைத்தியசாலையில் காணப்படுகின்றன எனவும் இதனால் வைத்திய தேவைக்காக செல்பவர்களுக்கு உரிய மருந் துகள் அங்கு கிடைப்பதில்லை எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, மருந்தக நிர்வாகத்தினர் வைத்தியசாலையில் காணப்படும் குறைபாடுகள்மற்றும்குரங்கு தொல்லை தொடர்பிலும் வடமாகாண ஆளுநர் மற்றும் சம்பந்தப்பட்ட திணைக்களத்துக்கு தெரியப்படுத்தியுள்ளதாகத் தமக்குத் தெரிவித்துள்ள போதும் இதுவரை எந்த விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை எனவும் மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

எனவே, வைத்தியசாலையின் குறைபாடுகள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநருக்கு பி.எஸ் .எம். சாள்ஸுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மருந்தகத்திற்கு நிரந்தர கட்டிடம் இல்லாத நிலையில் கிளிநொச்சிபிராந்தியசுகாதார சேவைகள் நிலையத்தின் கட்டிடத்திலே தற்காலிகமாக குறித்த மருந்தகம் இயங்கி வருகின்றது. எனினும், குறித்த கட்டடத்தின் அபிவிருத்தி பணிகள் முழுமையாக நிறைவடையாத நிலையில் நிலையத்தின் கூரைத்தகடுகள் குரங்குகளால் சேதமாக்கப்பட்ட நிலையில் தற்போது கழண்டு விழும் நிலையில் காணப்படுவதால் அங்கு பணியாற்றுபவர்கள் மற்றும் வைத்திய சேவை யைப் பெறசெல்பவர்கள் உயிர் ஆபத்தை எதிர் நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது எனவும் அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். இதேவேளை, தற்பொழுது மருந்தகத்துக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து செல்வதால் வைத்திய சாலைக்கு வழங்கும் மருந்துகளின் அளவுகளினை உடனடியாக அதிகரிக்க வேண்டும் என்பதுடன் குறித்த சித்த மருத்துவ நிலையத்தின் அடிப்படையான திருத்த வேலைகளை உடனடியாக மேற்கொண்டு மீண்டும் கிளிநொச்சி மாவட்டத்துக்கான சிறந்த மருத்துவ சேவையை வழங்கும் நிலையமாக குறித்த மருந்தகத்தை மாற்றி அமைத்து தருமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (05)



காலைக்கதிர்
Kalaikkathir



# உளவியல் ஆலோசனை










அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் அம்பாறை மாவட்ட பணிப்பாளர் எம்.ஐ.எம்.றியாஸின் ஆலோசனையிலும் மனித மேம்பாட்டு அமைப்பின் ஏற்பாட்டிலும், முஸ்லிம் வாலிபர்சங்கம்மாவடிப்பள்ளிகிளையின் அனுசரணையுடன் புதன்கிழமை காலை முதல் மாலை வரை உளவியல் ஆலோசனை மற்றும் தலைமைத்துவ ஒருநாள் பயிற்சி பட்டறை தேசிய இளைஞர் சேவைகள் மன்ற சாய்ந்தமருது பயிற்சி நிலைய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மனித மேம்பாட்டு அமைப்பின் பணிப்பாளரும் மாவடிப்பள்ளி வை.எம்.எம்.ஏயின் தலைவருமான எஸ்.ஏ.முஹம்மட் அஸ்லம் தலைமையிலும், அமைப்பின் உயர்பீட உறுப்பினர்களின் ஒழுங்குபடுத்தலிலும் நடைபெற்ற இந்நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கிழக்கு மாகாண பணிப்பாளர் எம்.பி. சரத் சந்தரப்பால பிரதம அதிதியாகக் கலந்து கொண்டதோடு அதிதிகளாக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கிழக்கு மாகாண காரியாலய நிர்வாக உத்தியோகத்தர் பி.தியாகராஜா, நிலையத்தின் பொறுப்பதிகாரி எ.ஹமீர், கிழக்கு மாகாண காரியாலயத்தின் உத்தியோகத்தர்கள், மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ஏ. அலி, நிலையத்தின் போதனாசிரியர்கள் என பலர் கலந்து கொண்டதோடு. சாய்ந்தமருது இளைஞர் தொழிற்பயிற்சி நிலையத்தில் கல்வி பயிலும் 50 இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டு விரிவுரைமற்றும்செயற்பாட்டுரீதியிலான பயிற்சிகளை பெற்றுக் கொண்டனர். இந்தப்பயிற்சிபட்டறையின்வளவாளராக முன்னாள் தேசிய இளைஞர் படையணி வாழைச்சேனை பயிற்சி நிலையத்தின் பொறுப்பதிகாரி மேஜர் கே.எம்.தமீம் அவர்களாலும் , சம்மாந்துறை பிரதேச செயலக உத்தியோகத்தர் எஸ்.எச்.எம். இர்பான் மௌலானா அவர்களாலும் விரிவுரைகளும், பயிற்சிகளும் நடத்தப் பட்டன. அன்று மாலை இடம்பெற்ற சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கிழக்கு மாகாண பணிப்பாளர் எம்.பி. சரத் சந்திரபால, முன்னாள் தேசிய இளைஞர் படையணி வாழைச்சேனை பயிற்சி நிலையத்தின் பொறுப்பதிகாரி மேஜர் கே.எம். தமீம், இளைஞர் சேவை அதிகாரி மோகன்ராஜ், முன்னாள் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் யூ.எல்.எம். ஜெஸ்மீர் ஆகியோர் கலந்துகொண்டு சான்றிதழ்களைவழங்கிவைத்தனர். (05)

# முஸ்லிம் வித்தி தரமுயர்வு

கல்முனைநகர்மக்களின் நீண்ட கால தேவையாக இருந்து வந்த கல்முனை கல்வி வலய கல்முனை கமு/கமு/ இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலய தரமுயர்வு என்னுடைய வேண்டுகோளின் பிரகாரம் கிழக்கு மாகாண கல்வி அமைச்சால்1சிபாடசாலைய-ாக (தரம் ஒன்று முதல் 13 வரை) தரமுயர்த்தப்பட்டது மகிழ்ச்சியளிக்கிறது என ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச். எம். எம். ஹரீஸ் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

இந்த பாடசாலையை தரமுயர்த்த வேண்டிய அவசியம் தொடர்பிலும், இந்தப் பாடசாலையின் தேவை தொடர்பிலும் ஆழமாக கேட்டறிந்து இந்த பாடசாலையை தரமுயர்த்த துரித நடவடிக்கை எடுக்க உதவியஜனாதிபதிசெயலாளர் சமன் ஏக்கநாயக்க, கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகியோருக்கு எனது நன்றிகளைத் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

மேலும் இந்தப் பாடசாலையை தரமுயர்த்த நடவடிக்கை எடுத்த கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ். ரத்னாயக்க, கல்விஅமைச்சின்செயலாளர் எச்.ஈ.எம். டவலியு.ஜீ. திசாநாயக்க தலைமையிலான அமைச்சின் அதிகாரிகள், மாகாணகல்விப்பணிப்பாளர் அகிலாகனகசூரியம்தலைமையிலான அதிகாரிகள், கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ்.எஸ். நஜீம் தலைமையிலான அதிகாரிகள், பாடசாலை அதிபர், முகாமைத்துவ மற்றும் அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள் எல்லோருக்கும் எனதுநன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கிறேன்.

இந்த பாடசாலை தரமுயர்த்தப்பட்ட நோக்கம், இலக்குஎன்பனஇறைவனின் உதவியுடன் சிறப்பாகவும் முழுமையாகவும் நிறைவேற இறைவனை பிரார்த்திக்கிறேன் என்று தெரிவித்துள்ளார். (05)

# 10 லட்சம் மக்கள் பார்வையிட்ட கொழும்பு தாமரைக் கோபுரம்



கொழும்பு தாமரை கோபுரம் கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் பொதுமக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது முதல் இன்று வரை அதனை பார்வையிட வந்தவர்களின் எண்ணிக்கை 10 லட்சத்தைத் தாண்டியுள்ளது.

கொழும்பு தாமரைக் கோபுரத்தைப் பார்வையிட்ட ஒரு மில்லியன் மக்களில் சுமார் 22,000 வெளிநாட்டவர்கள் உள்ளடங்குகின்றனர்.

ஏற்கனவே, கோபுரத்தைப் பார்வையிடுவதற்கான டிக்கெட்டுகள் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் , தற்போது இரவு 10 மணி வரை பார்வையிட அனுமதிக்கப்படுவார்கள் என்று நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது.

மேலும், வார இறுதி நாள்களில் காலை 9 மணி முதல் இரவு 10 மணி வரை டிக்கெட்டுகள் வழங்கப்படும். வார இறுதி நாள்களில், பொதுமக்கள் இரவு 11 மணி வரை தாமரை கோபுரத்தில் இருக்க முடியும் என நிர்வாகம் மேலும் தெரிவித்துள்ளது. தாமரை கோபுரத்தை சேதப்படுத்தும் நபர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் சொத்துக்களை சேதப்படுத்திய பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என நிர்வாகம் சுட்டிக்காட்டியுள்ளது. (05)




காலைக்கதிர் Kalaikkathir

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

## செவ்வழி நயனம்

# மெய்ப்பொருள் காண்பதறிவு

இந்த உலகம் பொருள்களால் ஆனது. பொருள்கள் தம்முள் வேறுபட்ட தனித்தன்மைகள் உடையன. சில பொருள்கள் வேறுபட்டு விளங்கினாலும் பிறிதொரு பொருளுடன் ஒன்றும் இயல்புடையன. சில தனித்தன்மை பெற்றே விளங்குவன. மாந்தர் வாழ்க்கை பொருள்களுடன்தொடர்புடையதுவாழ்வின் துறைதோறும் வாழ்வு முழுவதும் பொருள்களுடன் யாதானும் ஒரு உறவு இல்லாமால் வாழ்க்கை அமைவதில்லை அமையாது; அமைதல் முடியாது. அதனால் தான் திருக்குறள் 'பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை' என்றது.

பொருள்களால் ஆனது வாழ்க்கை. இந்தப்பொருள்களைபொருளின்தன்மை களை உள்ளவாறறிந்து அப்பொருள் தன்மைக்கு ஏற்பவும் வாழ்க்கைக்குரிய வகையிலும்பயன்படுத்த அறிந்துகொள்ள வேண்டும். பொருள்களின் தன்மை யறிதலுக்குத் தனித்திறனும் பயிற்சியும் அறிவும் வேண்டும். பல பொருள்கள் தோற்றமான நிலையிலேயே தொடர்ந்து இருப்பதில்லை. மாறும்தன்மைஉடையன உண்டு. சில பொருள்கள் நிலையாயின போலத் தோன்றும் பெயர் பெற்று விளங்கும்.

ஆனால் நிலையில்லாதவனாகிப் போதலும் உண்டு. சில நன்மை தருவது போலக் காட்டி துன்பம் தரும் சில துன்பம் தருவது போலக் காட்டி இன்பம் தரும். சான்றாக நமது உடலுக்கு 'மெய்' என்று பெயர். ஆனால் இது உண்மையல்ல. காலத்தால் கேடுறுதலாம். சர்க்கரை இனிமையானது. சர்க்கரையால்விளைவது பெருந்துன்பம். வெந்தயம் கசப்பான பொருள். ஆனால் வாழ்க்கைக்கு நலம் தருவது; இன்பம் தருவது.

குளிர்ச்சியானவையாக இருப்பவை சூட்டையேதருகின்றன. சூடாக இருப்பவை குளிர்ச்சியையே தருகின்றது. ஆதலால் பொருளின் தோற்றம் பார்க்காமல் பொருளின் தன்மை அப்பொருளால் விலையும் பயன் ஆகியன தெரிந்து அதற்கேற்பப் பயன்படுத்தல் வேண்டும். இத்தகு அறிவு சராசரி மனிதர்களுக்குக் கிடைப்பதில்லை. ஞானிகளுக்கேஉண்டு. சாதாரண மக்கள் தோற்றதால் கவர்ச்சிக்கப்படுவர். தற்காலிகமானவை யாகஇருப்பினும்உடனடியாகபலன்களை எதிர்பார்ப்பர். எப்பொருளையும் ஆழ்ந்து நோக்குவதில்லை. வேளாண்மைக்குப் பயன்படும்இரசாயனஉரங்கள்உரமே இல்லை. இரசாயன உரங்கள் ஒருவகைத் தூண்டு சக்தியேயாகும். ஆனால் நமது மக்கள் இவைகளை உரம் என்று நம்பினார்கள் இந்த உரத்தையே நம்பி குப்பை உரம் தயாரிப்பதை மறந்தார்கள். இதனால்நிலத்தின்பூசாரம்குறைந்ததுதான் மிச்சம். அறியாமை அறிவாக ஏற்றுக் கொள்ளப்படுதல் இன்றைய பெரு வழக்கு. இதற்கு அப்பரடிகள் ஒரு கதை கூறி விளக்கினார்.

ஆமை சாப்பிடும் மக்கள் ஆமையை உலைப் பானையில் இட்டு வேக வைத்தார்கள். உலைப் பானையில் தண்ணீர் இளஞ்சூடாக இருக்கும்பொழுது ஆமை இன்ப போதையில் துள்ளி விளையாடும்.

ஆனால் அந்தச் சூடு இன்பமாக இருக்கும்பொழுது நீடிக்கப்போவதில்லை. விரைவில் கொதி நிலை மாறும் ஆமை அழியும் இதனை உணரும் சக்தி ஆமைக்குஇல்லைஆமைக்குமட்டுந்தானா?ம னிதர்களில்பலர்இப்படிதான்வாழ்கின்றனர். பெரும்பான்மையானமக்கள்காலப்போக்கில் துன்பம்விளவிப்பனவற்றையே இன்பமெ னக் கருதி வாழ்ந்து ஏமாற்றத்திற்கு ஆளாகின்றனர். இதனைத்திருவள்ளுவர் 'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்மெய்ப்பொருள் காண்பதறிவு' (திருக்குறள் - 355) என்றார்.

தெய்வேந்திரம் வஜிதா



# யாழ்ப்பாணத்து அக்ரகாரங்கள்

வடமொழியில் 'அக்ரம்' என்றால் முதன்மை யான என்றும் 'ஹாரம்' என்றால் மாலை என்றும் பொருள்.

ஆக, பழைய காலத்தில் கோயிலைச் சுற்றியிருந்த முதன்மையான ஆரம் போன்ற அந்தணர் குடியிருப்பு அக்ரகாரம் எனப்பட்டது.

ஈழத்தில் அக்ரகார அமைப்பிலான தொடர்ச்சி யான அந்தணர் குடியிருப்புகள் அண்மைய காலத்தில் மிக குறைவாகவே அவதானிக்கப்படுகின்றன.

இலங்கையில்அந்தணர்கள்நிலவுடமைச்சமூகம் அல்ல என்பதும் பெரும்பாலும் அர்ச்சக மரபினரே இவர்கள் என்பதும் கவனிக்கப்படவேண்டியது.

எனவே, தமிழரசர் காலத்தில் இவ்வாறான குடியிருப்புகள்இருந்ததாகஇலக்கியங்கள்கூறினாலும், நடைமுறையில் காண்பது அரிது. ஊருக்கு ஓரிரு குடியாகப் பரவி வாழும் தன்மையே அதிகம்.

எனினும், நான் அறிந்த வகையில், நல்லூர் கந்தசுவாமி கோயில் வீதியிலும், இணுவில் கந்தசுவாமி கோயில் வீதியை ஒட்டியும், சுன்னாகம் மயிலணி கந்தசுவாமி கோயிற் சூழலிலும், வட கோவை (கோப்பாய் வடக்கு) பகுதியிலும், நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோவில் வீதியிலும், மாவிட்டபுரத்தில் கந்தசுவாமி கோயிற் சூழலிலும், கந்தரோடையிலும், காரைநகரிலும் (குறிப்பாக மணற்காடு மற்றும் களபூமி) புன்னாலைக்கட்டுவனி-லும், ஆவரங்காலிலும், நயினாதீவிலும், சுழிபுரத்தி லும் (குறிப்பாக குடியிருப்பு), புலோலியிலும் இவ்வாறான சற்றே நீண்ட தொடர் குடியிருப்புகள் சில தசாப்தங்களுக்கு முன் வரை இருந்து வந்துள்ளன.


இப்பொழுதும் இந்த ஊர்களில், இதற்கான அடையாளங்கள் இருக்கின்றன.

இவற்றிலே இன்றும் ஆச்சர்யப்படத்தக்க வகையில், மயிலணியில் அக்ரகாரமாக தொடர் குடியிருப்பு காணப்படுகிறது.

இந்த குடியிருப்பு பல ஆளுமைகளை வழங்கி யிருக்கிறது. இன்றும் வேத சிவாகம வல்லுனர்கள் இந்த அக்ரகாரத்தை அலங்கரிக்கிறார்கள்.

வேத ஆகம மரபுவழி படிப்புக்கும் ஒன்றிணைந்த செயற்பாட்டுக்கும் இந்த அமைப்பு (இணையமற்ற) கடந்த காலங்களில் பேருதவியாக அமைந்திருக்கிறது.

இது பற்றி ஆராய்கிற போது, ம.க.வேற்பிள்ளை அவர்கள் (1847- 1930) குறித்தும் அவர் எழுதிய ஈழ மண்டலச்சதகம் குறித்தும் சொல்ல வேண்டும்.











இவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் மாணவர். தமிழகத்திலும் இலங்கையிலும் பெரிதும் மதிக்கப்பெற்ற தமிழறிஞர்.

பல நூல்களின் ஆசிரியரான இவர் எழுதிய ஈழமண்டல சதகம் என்ற நூல் மிகவும் புகழ் பெற்றது.

நூறாண்டுக்கு மேல் பழைமையான இந்நூல் நூறு பாடல்களைக் கொண் டது. இந்நூலை 1923ல் ம.க.வே. திரு ஞானசம்பந்தபிள்ளை அவர்கள் பதிப்பித்தி ருக்கிறார்.

அந்த நூலின் ஒரு பாடல் ஆதிசைவர், வைதிக சைவர்களான ஈழத்து அந்தணர்கள் பற்றி பேசுகிறது.

நூறு / நூற்றைம்பதாண்டுகளுக்கு முன் அந்தணர்கள் (சிவப்பிராமணர்கள் ) செறிந்து அக்ரகாரங்களை அமைத்து சிறப்புற்றிருந்த இடங்களாக இந்நூல் யாழ்ப்பாணத்தின் பதினொரு ஊர்களை சிறப்பாக சொல்கிறது.

அவையாவன, விளைவேலி, நீர்வேலி, நவிண்டில், காரைநகர், கந்தரோடை, நல்லூர், வண்ணார்பண்ணை, கீரிமலை, மாவிட்டபுரம், புத்தூர், புலோலி என்பனவாகும்.

இன்று இந்நிலையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ள போதும், இலங்கையிலும் தமிழகத்தை ஒத்ததாக அக்ரகாரங்கள் அமைத்து அறிவொழுக்கங்களுடன் கூடியவர்களாக அந்தணர்கள் வாழ்ந்து வந்துள்ளனர் என்பதற்கு இந்தப் பாடல் ஒரு பழைமையான சான்றாகும்.

விளைவேலி நீர்வேலி யொடு நவிண்டிலின் மிகவு மேவுவர் ஆதிசைவர்
வேதவேதாங்கம் பயின்றுளா ராகமநல் விற்பன்னர் விமரிசையுளார்
களைசூலி யடியவர் முனிடுசாப நடையதிலர் காரைநகர் கந்தரோடை
கதிகொடிரு நல்லை திரிகன்னனமர் வண்ணைமுது கயிலைநிகர் நகுலைககனத்
தளைகா குகன் மாவை புத்தூர் புலோலி நகராதியா மூர்களினெலா
அமர் அந்தனர் கல்வி அறிவொழுக்கம் பெரிது அடைவர் வைதிக சைவரையந்
தளையேனை அளவிறவ றுளையேனை யென்புரிதி சாந்தநாயகி சமேத
சந்த்ரமௌலீசனே ஐந்தொழில் விலாசனே சந்த்ரபுர தலவாசனே

என்பதே அப்பாடல் ஆகும். சற்றே கடிய நடையில் இருந்தாலும் இரு முறை வாசித்தால் புரிந்து கொள்ள தக்க அழகிய பாடல் இது.

தியாக. மயூரகிரிக்குருக்கள்

# இலங்கைக்குத் தொடர்ந்தும் உறுதியான ஆதரவை வழங்கிவரும் சீனாவிற்கு நன்றி

## கமால் குணரட்ண பாராட்டு

இலங்கைக்குதொடர்ந்து உறுதியான ஆதரவை வழங்கிவருவதற்காக சீனாவிற்கு பாதுகாப்பு செயலாளர் கமல் குணரட்ண நன்றியைதெரிவித்துள்ளார்.

சர்வதேச அரங்கில் இலங்கைக்கு எதிராக ஆதார மற்றகுற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டவேளை சீனா உண்மையான நண்பனாக விளங்கியது. தோளோடு தோள்நின்றது எனவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

சீனா எமக்கு அவசியமான புரிந்துணர்வுடன் செயற்பட்டு ஆதரவை வழங்கியது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். சீனா இராணுவத்தின் 96வருட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இருநாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள்குறிப்பாகபாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்து அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையும்சீனாவும் பிராந்தியத்தில் அமைதி மற்றும் ஸ்திரதன்மை குறித்து அர்ப்பணிப்புடன் உள்ளனஎனகமல்குணரட்ன தெரிவித்துள்ளார். (05)





# டெங்கு உணர்குறிகள் வெற்றிகரமான சிகிச்சை தொடர்பில் பயிற்சிப்பட்டறை

கல்முனைப் பிராந்தியத்தில்டெங்குநோய்த்தாக்கம் அதிகரிக்கலாம்என்றகளஆய்வு அறிக்கைகளுக்கமைவாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கும் அமைவாக பிராந்திய தொற்றுநோய் தடுப்புபிரிவின்பொறுப்புவைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ சீ.எம் பசால் அவர்களினால் டெங்கு உணர்குறிகள் மற்றும் வெற்றிகரமான சிகிச்சை தொடர்பில் விசேட பயிற்சிப்பட்டறையொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட பணிமனையின் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம்.பீ. அப்துல் வாஜித் தனது தலைமையுரையில்; டெங்கு ஒழிப்பின் அவசியம் பற்றியும் இந்நோயை முன்னரை விட அதிகம் எதிர்த்து போராட வேண்டியதன் அவசியம் பற்றியும்வலியுறுத்தியிருந்தார்.

இந்நிகழ்வில் தொற்று நோய்த் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர்எம்.ஐ.எம்.எஸ். இர்சாத், சுற்றுச்சூழல் மற்றும் தொழில் சுகாதார பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எஸ். எம். பௌசாத், பொது சுகாதார பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ.எம். ஹில்மி ஆகியோர் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த விசேட பயிற்சி நெறியில்விசேடவளவாளராக கலந்து கொண்ட பொது வைத்திய நிபுணர் டாக்டர் எம். யூசுப் டெங்கு தொடர்பில் விரிவான விளக்கங்களை வழங்கியிருந்ததுடன் வைத்தியர்களின் கேள்விகளுக்கும் பதில்களை வழங்கி வைத்தார்.

மேலும் நிகழ்வை ஒருங்கிணைப்பு செய்த பிராந்தியதொற்றுநோய்தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ சீ.எம் பசால் டெங்கு தொடர்பிலான புள்ளிவிவரங்களையும்டெங்கு நோயை கட்டுப்படுத்துவதிலுள்ள சவால்கள் மற்றும் தடைகள் பற்றியும் விரிவாக விளக்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# மாகாணப் போட்டிகளுக்கு இருபது வீரர்கள் தெரிவு





கல்முனைகல்விவலய மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் கல்முனை கமு/கமு/அல்-பஹ்றியா மகா வித்தியாலய (தேசிய பாடசாலை) 24 மாணவ, மாணவிகள் வெற்றியீட்டி கிழக்கு மாகாணமட்ட மெய்வல்லுநர் போட்டிகளுக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

கல்முனை கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகள் கடந்த 24, 25 ஆம் திகதிகளில் கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றன. இதில் கல்முனை அல்-பஹ்றியா மகா வித்தியாலய (தேசிய பாடசாலை) மாணவ மாணவிகள் 29 விளையாட்டு நிகழ்ச்சிகளில் 13 முதலாம் இடங்கள், 07 இரண்டாம் இடங்கள், 09 மூன்றாம் இடங்கள் பெற்று அதில் (20 விளையாட்டு நிகழ்ச்சிகளில் தெரிவு செய்யப்பட்டு) எதிர்வரும் 19-09-2023 இல் நடைபெற இருக்கின்ற மாகாணமட்ட மெய்வல்லுநர் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த வெற்றிக்குக் காரணமாக இருந்த பாடசாலை அதிபர் எம். எஸ்.எம்.பைசால், பிரதி அதிபர்களானஎம்.ஏ.அஸ்தார், எம்.எஸ். சலாம், உதவி அதிபர் றினோஸ் ஹஜ்ரின், உடற்கல்வி பொறுப்பாசிரியர்கள் யூ.எல். ஷிபான், எம்.எஸ். பளீல் மற்றும் விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களான எம்.ஏ.எம். றியால், ஏ.வீ.எம். ஆட் கான் ஆகியோருக்கு பாடசாலை ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு, பழைய மாணவர்கள் நலன்விரும்பிகள் வெற்றியீட்டிய மாணவ, மாணவிகளுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர். (05)



# பிரிவினைவாதிகளின் நிலைப்பாடு இன்னமும் நாட்டில் மாறவில்லை

## ரஞ்சித் பண்டார வேதனை

நாட்டில் பிரிவினை வேண்டும் என்று கோரும் தரப்புக்களின் நிலைப்பாடு இன்னமும் மாறவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் - '13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்த தற்போது முயற்சிக்கப்படுகிறது. ஏன், இதனைஇவ்வளவுஅவசரமாகச் செய்ய வேண்டும்?

13 இற்கு முதல், இருக்கும் உரிமைகளைத் தாருங்கள். தேர்தலை முதலில் நடத்துங்கள்.

சர்வக்கட்சி மாநாட்டின் போது,ஜனாதிபதியோதனக்கு மக்கள் ஆணை கிடையாது என்றும் இதனால்தான் அனைத்துக் கட்சிகளையும் அழைத்து பேச்சு நடத்துவதாகவும் கூறியிருந்தார்.

இது சிறந்த நிலைப்பாடுதான். ஆனால், இதுதொடர்பாக நாம் அவதானத்துடன் இருக்க வேண்டும். பேச்சுக்கு வரும் சில கட்சிகள், இந்நாட்டின் சாதாரண பொது மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதில்லை. அன்றிலிருந்து நாட்டில் பிரிவினை வேண்டும் என்று கோரும் தரப்புக்கள்தான் இவைகள். அவர்களின் நிலைப்பாடு இன்னமும் மாறவில்லை. அதுபோன்றவர்கள் தங்களின் நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வேண்டும்.

யாரேனும்ஒருதரப்பை சந்தோஷப்படுத்தவோ, நாட்டில் மீண்டும் ஒரு பிரிவினைவாதத்தை ஏற்படுத்தவோ நாம் கட்சி என்ற ரீதியில் இணங்கப் போவதில்லை. - என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

## பயிற்சிப்பட்டறை

பிரசவத்துக்கு பின்னரான உள பாதிப்புக்கள் தொடர்பில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களில்கடமையாற்றும் மேற்பார்வை தாதிய உத்தியோகத்தர்கள் மேற்பார்வை பொது சுகாதார மாதுக்கள் மற்றும் பொது சுகாதார மாதுக்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கும் அமைவாகதாய்சேய்நலப்பிரிவின் பொறுப்புவைத்திய அதிகாரி ஏ.எச்.ரிஸ்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் பிரதி பணிப்பாளர் எம்.பீ. அப்துல் வாஜித் கலந்து கொண்டதுடன்வளவாளராக கல்முனை பிராந்திய உளநல பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி எம். ஜே.நௌபல் அவர்களும் கலந்துகொண்டதுடன் சந்தேகங்களையும் தீர்த்து வைத்தார். (05)

# இரட்டைச் சகோதரிகள் மாயம் முந்தல் பொலிஸார் விசாரணை



இரட்டைச் சகோதரிகள் காணாமல்போன சம்பவம் தொடர்பில் முந்தல் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மங்களஎலியநுகசெவன கிராமத்தில் வசிக்கும் 16 வயதுடைய இருசிறுமிகளே காணாமல்போயுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த இரண்டு சிறுமிகளும் புதன்கிழமை முதல் வீட்டிலிருந்து காணாமல்போயுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களின் பெற்றோர் முந்தல் பொலிஸில் செய்த முறைப்பாட்டின்அடிப்படையில் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (05)

# இனப்பிரச்சினை குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டிய தேவை உள்ளது

## சமன் ரத்னப்பிரிய வலியுறுத்து



இனப்பிரச்சினையால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பாக முறையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டிய தேவை நாட்டிற்குள்ளும் சர்வதேசரீதியிலும் எழுந்துள்ளதாக ஜனாதிபதியின் தொழிற்சங்க விவகாரங்களுக்கான பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரியதெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு தொடர்பில்தொழிற்சங்கங்கள் மற்றும்சிவில்அமைப்புக்களை தெளிவுபடுத்துவதற்காக ஜனாதிபதி அலுவலகத்தில் நடத்தப்பட்ட கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மூன்று தசாப்த கால யுத்தத்தால் இன, மத வேறுபாடின்றி அனைவரும் பாரிய சேதங்களை சந்திக்க நேரிட்டது என்றும் தெரிவித்தார்.

இந்தவிடயம்தொடர்பில் முறையான விசாரணை நடத்தப்படவேண்டியதேவை நாட்டுக்குள்ளும் சர்வதேச ரீதியிலும் எழுந்துள்ளதாக குறிப்பிட்ட அவர், அதற்காக ஸ்தாபிக்கப்பட்ட பல்வேறு ஆணைக்குழுக்கள் முன்வைத்த யோசனைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். தென்னாபிரிக்கா போன்ற நாடுகளின்பொறிமுறைகளை ஆராய்ந்து இலங்கைக்குப் பொருத்தமான பொறிமுறையைதயாரிக்கநடவடிக்கை எடுக்கப்படும்.

இதனை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியாவிட்டால் நாடு மீண்டும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்படும். எனவே சமூகத்தை தெளிவுபடுத்தி இதனைச் செயற்படுத்துவதற்கான ஆதரவைப் பெற வேண்டும்என்றும்அவர்மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

# இலங்கைத் தமிழ்ப் பெண் ஆஸ்திரேலியாவில் சாதனை!




இலங்கை வம்சாவளியைச் சேர்ந்தவரும் சட்டத்தரணியுமான சங்கரி சந்திரன் என்பவர் ஆஸ்திரேலியாவில் இலக்கியத்துக்காக வழங்கப்படும் அதியுயர் விருதான மைல்ஸ் பிராங்க்ளின் விருதை வென்றுள்ளார்.

'சாய் டைம் அட் சினமன் கார்டன்ஸ்' என்ற நாவலுக்காகவேஅவருக்கு இந்தவிருதுவழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு யுத்தத்திலிருந்து தப்பிப்பதற்காக 80 களில் நாட்டை விட்டு வெளியேறிய இலங்கையைச் சேர்ந்த ஒருவரால் நடத்தப்படும் முதியோர் பராமரிப்பு நிலையத்தில் வசிப்பவர்களின் வாழ்க்கையை இந்த நாவல் எடுத்துக்காட்டுவதோடு, போர், இனப்படுகொலை, இனவெறி, குடும்பம், காதல் மற்றும் நட்பு போன்ற கருப்பொருள்களை இந்த நாவல் ஆராய்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில்"ஆஸ்திரேலிய எழுத்தாளர்களிடையே அங்கீகாரம் பெறுவது அசாதாரணமானது. 'மைல்ஸ் பிராங்க்ளின் இலக்கிய விருதை வென்றது மிகவும் பெருமையாக இருக்கிறது' என சங்கரி குறிப்பிட்டுள்ளார்.

வைத்திய தம்பதிகளான சங்கரியின் பெற்றோர் 80 களில் உள்நாட்டு யுத்தம் காரணமாக இலங்கையில் இருந்து பிரித்தானியாவுக்கு சென்று பின்னர் ஆஸ்திரேலியாவுக்குக் குடியேறியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

# பிலியந்தலை பொலிஸ் போக்குவரத்து பிரிவின் இரு கான்ஸ்டபிளை தாக்கிய தம்பதியர் கைது

## இரு மகன்களும் கைதாவர்

பிலியந்தலை பொலிஸ் போக்குவரத்து பிரிவின் அதிகாரிகள் இருவரை தாக்கியதாகக் கூறப்படும் குழுவை சேர்ந்த கணவன் மற்றும் மனைவி ஆகியோரைக் கைது செய்துள்ளதாக கஹதுடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்தகுழுவினர்பொலிஸாரை சுற்றிவளைத்து தாக்கும்போதுபிரதானசந்தேக நபரின் மகன் ஒருவரின் கைத்தொலைபேசியில் வீடியோ எடுக்கப்பட்டமை பொலிஸாரின்விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தத்தாக்குதல்சம்பவம் தொடர்பில் சந்தேக நபரான தம்பதியின் இரு மகன்கள் உட்பட மேலும் பலர் கைது செய்யப்படவுள்ளனர்.

செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பிலியந்தலை பொலிஸ் போக்குவரத்து பிரிவைச் சேர்ந்த இரண்டு கான்ஸ்டபிள்களே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளனர். (05)

# மதவாதமும் இனவாதமும் பெருமளவில் கடந்த தேர்தலில் தலைதூக்கினவாம்

## வண.தம்பர அமில தேரர் சுட்டிக்காட்டு

கடந்த காலத்தில் இடம்பெற்றதேர்தலில்மதவாதமும், இனவாதமும் பெருமளவில் தலைதூக்கியிருந்தன என வண.தம்பர அமில தேரர் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையைக்கண்டறியும்ஆணைக்குழுதொடர்பில் தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புக்களை தெளிவுபடுத்துவதற்காக ஜனாதிபதி அலுவலகத்தில் நடத்தப்பட்ட கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த தேர்தலில் மதவாதமும்,இனவாதமும்பெருமளவில் தலைதூக்கியதால், அந்த அனுபவத்தை மக்கள் மறக்க முன் இந்த செயற்பாட்டை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்தார்.

ஜனாதிபதி தற்போது துணிச்சலானதீர்மானங்களை மேற்கொண்டு வருகிறார் எனவும், அவ்வாறேமீண்டும் இவ்வாறான சம்பவம் இடம்பெறாதிருக்க தேவையான கல்விச்சீர்திருத்தங்களைமேற்கொள்ள வேண்டும் எனவும் தம்பர அமில தேரர் மேலும் சுட்டிக்காட்டியிருந்தார். (05)



# கண்டி பாடசாலையில் மாணவியை சேர்க்க 3 லட்சம் ரூபாவை மோசடி செய்தவர் கைது

கண்டி நகரிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றில் மாணவியை ஒருவரை சேர்ப்பதாக கூறி மூன்று லட்சம் ரூபாவை பெற்று மோசடிசெய்த குற்றச்சாட்டில் ஒருவரை பொலிஸார் புதன்கிழமை கைது செய்துள்ளனர். கட்டுகஸ்தோட்டை பொலிஸ்பிரிவுக்குஉட்பட்ட குளகம்மன பிரதேசத்தில் வசிக்கும் ஒருவரிடம், குறித்த சந்தேக நபர் மூன்று லட்சம் ரூபாவைப் பெற்றுள்ளார்.

இவ்வாறு பெறப்பட்ட பணம் மோசடி செய்யப்பட்டமை தொடர்பில் கடந்தபெப்ரவரிமாதம்கட்டுகஸ்தோட்டை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பொலிஸா ரின் விசாரணைகள் பின் மெனிக் கின்ன பிரதேசத்தை சேர்ந்த குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# பெரும் பொருளாதார நெருக்கடியிலிருந்த நாட்டை ஜனாதிபதியே கட்டியெழுப்பினார்

## ஹாபீஸ் நஷீர் அஹமட் பாராட்டு

நாட்டில் பாரிய பொருளாதார நெருக்கடியில் யாருமே பொறுப்பெடுக்க முடியாத நிலையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பாரம் எடுத்து நாட்டை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்பியுள்ளார் என்று சுற்றாடல் அமைச்சரும், பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுத் தலைவருமான ஹாபீஸ் நஷீர் அஹமட் தெரிவித்தார்.

ஓட்டமாவடி பிரதேச செயலகத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா பிரதேச செயலாளர் வீ.தவராஜா தலைமையில் இடம்பெற்றபோது அதில் பிரதம அதிதியாக சுற்றாடல் அமைச்சரும், பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுத் தலைவருமானஹாபீஸ்நஷீர் அஹமட் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ நாட்டை ஆட்சி செய்வதில் சிக்கல் ஏற்பட்ட நிலையில் நாட்டை பாரம் எடுத்து ஆட்சியை செய்யுமாறு தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை அழைத்து சொன்னபோது அவர் பின்வாங்கிய நிலையில் நாட்டில் ஒரு புரட்சி ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் எல்லோர் மத்தியிலும் இருந்தது அந்த சந்தர்ப்பத்தில்தான் இன்றைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தைரியத்தோடு நாட்டை பாரம் எடுத்து பொருளாதார வீழ்ச்சியில் இருந்த நாட்டைக் கட்டி எழுப்பிக் கொண்டு இருக்கின்றார்.

இந்த சந்தர்ப்பத்தில் தமிழ்தரப்பு அரசியல் கட்சிகளுடன் பேச்சு இடம்பெற்று அவர்களது கோரிக்கைகளைக் கேட்டறிந்து கொண்டதுடன் முஸ்லீம்களுடைய அதிகாரப் பகிர்வில் பங்கு என்ன என்கின்ற விடயத்தை மிகவும் தெட்டத் தெளிவாக ஆணித்தரமாக முஸ்லீம் அரசியல் தலைமைகள் எல்லோரும் உடன்பாட்டுக்கு வரவேண்டிய தேவை இருந்தது.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது இரவோடு இரவாக முஸ்லிம்களுடைய உரிமைகள் பறிக்கப்பட்ட ஓர் அரசசாசனமாகத்தான் பதின்மூன்றாவது திருத்தம் அப்போது இருந்தது. அதன் பின்னர் வடக்கு கிழக்கு இணைக்கப்பட்டு முஸ்லீம் சமுகத்தினுடைய ஒட்டுமொத்த அரசியல் தலைவிதியை மாற்றிய ஒரு வரலாற்றை நாங்கள் எப்போதும் மறந்துவிட முடியாது.



அவ்வாறானதொரு வரலாறு மீண்டும் எழுதப்பட்டு விடக்கூடாது என்பதற்காக நாங்கள் மிகவும் தெளிவாக இருக்கின்றோம். இரவோடு இரவாகத்தான் பதின்மூன்றாவது திருத்தம் இந்தியாவினுடைய அழுத்தத்தால் நிறைவேற்றப்பட்டது.

அப்போது முஸ்லீம்களால் எதுவும் பேசமுடியாமல் இருந்தது. அப்போதிருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன முஸ்லீம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலைமையில் சென்று முஸ்லீம்களது அரசியல் நிலைவரம் என்ன என்று கதைப்பதற்கு சென்ற வேளையில் உங்களுக்கு கதவு திறந்து இருக்கின்றது வெளியே போகலாம் என்று சொல்லப்பட்டது. அவ்வாறான ஒரு நிலைமைக்கு முஸ்லீம்கள் மீண்டும் தள்ளப்பட்டு விடக்கூடாது என்று நாங்கள் தெளிவாக இருக்கின்றோம் என்று தெரிவித்தார். ஓட்டமாவடி பிரதேசசெயலாளர் வீ.தவராஜா தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் கௌரவ அதிதியாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி கலந்து கொண்டதுடன் ஏனைய அதிதிகளாக கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் எஸ்.எச். முஸம்மில், ஏறாவூர் பிரதேச செயலாளர் நிஹாரா மௌஜூத் ஆகியோர் கலந்து கொண்டதுடன் திணைக்கள தலைவர்கள், பிரதேசசெயலக உத்தியோகத்தர்கள், அமைச்சர் ஹாபீஸ் நஷீர் அஹமட்டின் இணைப்பு செயலாளர் ஏ.ஏ.நாஸர், கல்குடா தொகுதி இணைப்பாளர் எம்.ஜவாத் மற்றும் பொதுமக்கள்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன் போது காகிதநகர் கிராம சேவகர் பிரிவில் அரச காணியை பராமரித்து வந்தவர்களுக்கு காணி உறுதிப் பத்திரமும் வழங்கப்பட்டதுடன் மாமரக்கன்றுகளும் நடப்பட்டன. (05)

# 13 ஆம் திருத்தத்தை நிறைவேற்றும் பொறுப்பு ஜனாதிபதிக்கே உள்ளது!

## ரன்ஜித் மத்தும பண்டார கூறுகிறார்

நாடாளுமன்றில் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ள 13 ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு ஜனாதிபதிக்கே உள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் ரன்ஜித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகசந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப் பட்டுள்ள 13 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு ஜனாதிபதிக்கே உள்ளது. தவிர எதிர்க்கட்சிகளுக்குக் கிடையாது.

13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் ஜனாதிபதிக்கு எந்தவொரு சிக்கலும் இல்லை.

ஏனெனில், 13 பிளஸ் தருவதாக அன்று உறுதியளித்த மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்களே இன்று ஜனாதிபதிக்கும் ஆதரவை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.



மாகாணசபைத் தேர்தல் 6 வருடங்களாக இடம்பெறவில்லை. இந்தத் தேர்தலை பழைய முறையில் நடத்துமாறு நாம் நாடாளுமன்றில் வலியுறுத்தியுள்ளோம். இதற்கான பிரேரணை கொண்டு வரப்பட்டால் நாம் ஆதரவு வழங்கத் தயாராகவே உள்ளோம்.

ஜனாதிபதி, உண்மையிலுமே அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்றா அல்லது அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சில பிரதேசங்களின் வாக்குகளைப் பெற வேண்டும் என்றா நினைக்கிறார் என்பது புரியவில்லை.

13 ஆவது திருத்தச் சட்டம் என்பது ஏற்கனவே பெரும்பான்மை வாக்குகளால் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டுள்ள ஒன்றாகும்.

எனவே, இதனை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு ஜனாதிபதிக்குதான் உள்ளதே ஒளிய, எதிர்க்கட்சிகளுக்குக் கிடையாது. முதலில், ஜனாதிபதி அரசாங்கத்தின் யோசனைகளை முன்வைக்க வேண்டும். அதைவிடுத்து, மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கக்கூடாது. - என அவர் மேலும் தெரி வித்துள்ளார். (05)

# வீட்டு கழிப்பறைக்குள் வைத்து பெண்ணிடம் சங்கிலி அறுப்பு

## மட்டக்களப்பில் சம்பவம்

மட்டக்களப்பு இருதயபுரத்தில் உள்ள வீடொன்றில் கழிப்பறைக்குச் சென்ற வயது முதிந்த பெண்ணின் தங்கச் சங்கிலியை அயல் வீட்டு இளைஞரொருவர் பறித்துச் சென்ற சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சம்பவ தினமான புதன்கிழமை குறித்த பெண் கழிப்பறைக்கு சென்றுள்ள நிலையில் அங்கு மறைந்திருந்த குறித்த இளைஞர் அவரை தள்ளி கீழே வீழ்த்திவிட்டு அவரது தங்கச்சங்கிலியைப் பறித்துச் சென்றுள்ளார்.

இந்நிலையில் இந்தச் சம்பவம் குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டதையடுத்து பொலிஸார் மேற்கொண்ட தீவிர விசாரணையில் அந்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார். அத்துடன் கொள்ளையடிக்கப்பட்ட தங்க சங்கிலியும் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் கைதுசெய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)

# மருத்துவர்களின் கவனக் குறைவால் என் குழந்தையைப் பறிகொடுத்தேன்

## மனைவியின் கர்ப்பபையும் இழப்பு; கதறும் தந்தை

வைத்தியசாலை வைத்தியர்கள் பொறுப்பற்ற விதத்தில் செயற்பட்டு, தனது குழந்தையை கொலை செய்து மனைவியின் கர்ப்பப்பையையும் அகற்றி விட்டதாக தந்தை ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -




கடந்த 20 ஆம் திகதி அன்று எனது மனைவியை ஊடுகதிர் படப்பிடிப்பு (ஸ்கான்) செய்வதற்கு கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டுச் சென்றவேளை, எனது மனைவிக்கு குழந்தை வளர்ச்சி கூடுதலாக இருக்கிறது. நீங்கள் 12 ஆம் திகதி வாருங்கள் என அன்று பார்வையிட்ட வைத்தியரால் கூறப்பட்டது.

பன்னிரண்டாம் திகதி நாங்கள் மீண்டும் அந்த வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை வேறொரு வைத்தியர் பார்வையிட்டார். இவ்வாறு பார்வையிட்ட வைத்தியர் ‘யாரம்மா உங்களை வர சொன்னது? குழந்தைக்கும் உங்களுக்கும் எந்த பிரச்சினையும் இல்லை 26ஆம் திகதி வாருங்கள்’ என்று கூறினார்.

பிள்ளை பிறப்பு திகதியை விட்டு இரண்டு நாள்கள் அடுத்து 26ஆம் திகதி தரப்பட்டது. 26ஆம் திகதி காலையில் மனைவியை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற வேளை எனது மனைவிக்கு மருந்து ஏற்றப்பட்டது. பின்னர் அன்று இரண்டாவது தடவையாக 12 மணிக்கு மருந்து ஏற்றப்பட்டது.

இந்நிலையில் எனது மனைவிக்கு 12 மணி தொடக்கம் இரவு 7.30 மணி வரை இரத்தப்போக்கு ஏற்பட்டது. 7.30 மணிவரை எந்த வைத்தியரும் அந்த விடுதிக்கு வரவில்லை. இரண்டு தாதியர்கள் மாத்திரமே கடமையில் இருந்தார்கள். பி.ப 5 மணிக்கு எனது மனைவி ‘இரத்தப்போக்கு ஏற்படுகிறது, துடிப்பு குறைகிறது, வைத்தியரை அழைத்து வாருங்கள், எனது பிள்ளையை காப்பாற்றுங்கள்’ எனக் கதறினார். இதனை பார்த்தும் அந்த தாதியர்கள் அலட்சியமாக இருந்தனர்.

7.30 மணிக்கு வந்த இரண்டு வைத்தியர்களும் ஆயுதம் மூலம் முயற்சி செய்தனர். ஆனால் குழந்தை கிடைக்கவில்லை. பின்னர் 7.30 மணிக்கு சத்திரசிகிச்சைக்குக் கொண்டு சென்றனர். ஆனால் சத்திரசிகிச்சைக்கு கொண்டு செல்ல முன்னர் குழந்தையின் துடிப்பு நின்றுவிட்டதாக எனது மனைவியால் கூறப்பட்டது.

7.30 மணிக்கு சத்திர சிகிச்சைக்கு கொண்டு சென்ற பின்னர் 12.30 மணிக்கு தான் வைத்தியர்களால் எனக்கு கூறப்பட்டது ‘தாயை மட்டும் காப்பாற்றியுள்ளோம். பிள்ளையையும் கர்ப்பப்பையையும் காப்பாற்ற முடியவில்லை. கர்ப்பப்பையை அகற்றி விட்டோம்’ என்று.

ஆனால் இது வைத்தியர்களால் ஏற்படுத்தப்பட்ட கொலை என நான் கூறுகின்றேன். எனது குழந்தை இறந்ததற்கும் கர்ப்பப்பை அகற்றப்பட்டதற்கும் கிளிநொச்சி வைத்தியர்களே முழுமையான காரணம்.

குழந்தையின் வளர்ச்சி கூடவாக இருப்பதாக தெரிவித்த வைத்தியர் அவ்வாறு தெரிவித்த தினத்திலிருந்து விடுமுறையில் இருந்துள்ளார். அவர் 26 ஆம் திகதி தான் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மீண்டும் வந்துள்ளார். அடுத்ததாக பார்வையிட்ட வைத்தியர் ஏற்கனவே எனது மனைவியை பரிசோதித்த வைத்தியர் விடுமுறையில் இருந்து வரும் திகதியை, அதாவது பிறப்பு திகதிக்கு இரண்டு நாள்கள் கழித்து 26 ஆம் திகதியிட்டு தந்துள்ளார்.

சுகாதார அமைச்சரே வைத்தியர்களுக்கு சட்டங்கள் எதுவும் இல்லையா? வைத்தியர்கள் மீது சட்டங்கள் எந்த விதத்திலும் பாயாதா? எனது குழந்தையின் இறப்புக்கும் மனைவியின் கர்ப்பப்பை அகற்றியமைக் கும் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாதா? இவற்றுக்கு காரணமாக இருந்த வைத்தியர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

இதுவரைக்கும் இவ்வாறு சம்பவங்கள் நிகழ்ந்த போது எந்த வைத்தியருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இலங்கையில் வைத்தியர்களுக்கு சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சட்டம் இல்லையா? எமக்கு நிகழ்ந்த இந்த அநீதி இனி எந்த பெற்றோருக்கும் ஏற்படக்கூடாது. எனவே இதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்து நமக்கு நீதி தரவேண்டும் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து அவர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்துள்ளார். (05)

# நாவற்குழி மகா வித்தியாலயத்தில் ஆசான்களை கௌரவிக்கும் நிகழ்வு

நாவற்குழி மகா வித்தியாலயத்தில் 1982 தொடக்கம் 1992 காலப் பகுதியில் கல்வி கற்ற 92 க.பொ.த.சாதாரண பிரிவைச்சேர்ந்த மாணவர்கள் 30 ஆண்டுகள் கடந்து ஒருங்கிணைத்து நடத்தும் ஆசான்களைப் போற்றி கௌரவிக்கும் நிகழ்வு எதிர் வரும் 30 ஆம் திகதி நாவற்குழி மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.


இந்நிகழ்வில் வெளிநாடுகளில் இருந்தும் உள்நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பழைய மாணவர்களும், ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களும் வருகை தரவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இதன்போது கலந்துரையாடல், கருத்து பரிமாற்றம், பழைய நினைவுகளை மீட்டல், மதியபோசனம் உள்ளிட்ட பல பல்வேறு நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழில் சிறந்த வித்தியாலங்களில் ஒன்றாக விளங்கிவரும் இப்பாடசாலை நூற்றாண்டுகள் பழைமை வாய்ந்தது என்பதும் இப்பாடசாலையில் கல்வி கற்ற பலர் இன்று வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் புகழ் படைத்தவர்களாக வலம் வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அது மட்டுமல்லாது இப்பாடசாலையின் பழைய மாணவர் சங்கங்கள் இன்று பல நாடுகளில் இயங்கி வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

# கால்வாயிலிருந்து இளைஞரின் சடலம் மீட்பு!





கால்வாயில் இருந்து இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதுஎன்றுபொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வத்தளை - பள்ளியாவத்தை பகுதியில் உள்ள கால்வாயில் இருந்தே குறித்த சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

சுமார் 20 - 25 வயதுக் கிடைப்பட்ட இளைஞரின் சடலமே கால்வாயில் மிதந்து வந்த நிலையில் பொலிஸார் மீட்டுள்ளனர்.

சடலம் தொடர்பில் பொலிஸாருக்கு பொதுமக்கள் தகவல் வழங்கியதை யடுத்து பொலிஸார் சடலத்தை மீட்டு விசாரணை களை மேற்கொண்டு வரு கின்றனர்.

(02)

# ஆபாச படங்களை சமூக வலைத்தளங்களில் வெளியிட்ட யுவதிக்கு நீதிமன்றம் தண்டனை

ஆபாசமான புகைப்படங்களை வைத்திருந்தமை மற்றும் சமூக ஊடகங்களில் அவற்றை வெளியிட்டமை ஆகிய குற்றச்சாட்டுகளில் குற்றத்தை ஒப்புக்கொண்ட யுவதி ஒருவருக்கு அநுராதபுரம் பிரதான நீதிவான் மற்றும் மேலதிக மாவட்ட நீதிவான் நாலக சஞ்சீவ ஜயசூரிய தண்டனை விதித்தார்.

இதன்படி, குறித்த குற்றச்சாட்டுகளுக்கும் தலா 1, 500 ரூபா அரசாங்கக் கட்டணமாக வழங்குமாறு உத்தரவிட்ட பிரதான நீதிவான், மீண்டும் அவ்வாறான தவறுகளைச் செய்ய வேண்டாம் என யுவதியைக் கடுமையாக எச்சரித்தார்.

குற்றம்சாட்டப்பட்டவரின் கையடக்கத் தொலைபேசியில் இருந்த ஆபாச புகைப்படங்களை மீளமுடியாதவாறு நீக்கவும் சிம் கார்ட் மற்றும் மெமரிகளில் உள்ளவற்றை அழிக்கவும் அநுராதபுரம் பொலிஸ் தகவல் பிரிவு பொலிஸ் பரிசோதகர் ஐ.சி.பி. இலங்கசிங்கவுக்கும் நீதிவான் உத்தரவிட்டார்.

(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.07.2023இல் வெளியிடப்பெற்றது.